விலை ரூபா: 8.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பதினான்கு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | தை 08 | வெள்ளிக்கிழமை (21.01.2005) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 33

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## யாழ். அரச அதிபர் தலைமையில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

### தளபதி கேணல் சூசையும் பங்கேற்பு

வடமராட்சி கிழக்குப் பகுதியில் சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்றுக் காலை 10 மணிக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெற்றது.

யாழ். அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பின் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை கலந்து கொண்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.கா. ஈழவேந்தன், சிவநேசன், என். ரவிராஜ், பத்மினி சிதம்பரநாதன், எஸ்.கஜேந்திரன், எம்.கே. சிவாஜிலிங்கம் மற்றும் யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி குணராசா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் இராசையா, வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் செல்வரட்ணம், மருதங்கேணி உதவி அரச அதிபர் ஜெயசீலன் உட்பட அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள், கிராம சேவையாளர்கள், சமயப் பெரியார்கள் என பலர் கலந்துகொண்டனர்.

இக் கூட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மீள்குடியேற்றம், தற்காலிக வீடமைப்புத் திட்டங்கள், வீதிகள் திருத்தம், கடற்றொழிலினை மேம்படுத்தல், பாடசாலைகளை மீள இயக்குதல்,

(14 ஆம் பக்கம் பார்க்க)

## இத்தாலிய பிரதிப் பிரதமர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

(கொழும்பு)

இத்தாலிய, பிரதிப் பிரதமர் ஜியன் பிறாங் காப்பிணி தலைமையிலான குழுவினர் நேற்று மாலை இலங்கைக்கு வருகை தந்தனர்.

இவர்களை பிரதி வெளிவிவகார அமைச்சர் விஸ்ப வர்ணபால கட்டுநாயக்க விமான நிலையத்தில் வரவேற்றார்.

பிரதிப் பிரதமர் தலைமையிலான குழுவினர் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கடல் அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்புவது குறித்தும் அதற்குத் தேவையான நிதியுதவிகள் குறித்தும் அங்கு ஆராயப்பட்டது. புனரமைப்புப் பணிகளுக்கு கணிசமான உதவிகளை இத்தாலிய அரசு வழங்கும் என பிரதிப் பிரதமர் உறுதியளித்தார்.

இச் சந்திப்பில் இத்தாலிய அமைச்சர்கள் சிலரும் கலந்து கொண்டனர். ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கலந்துகொண்டார்.

(த-04)

# நோர்வேக் குழு நாளை வன்னிக்கு

## தலைவர் பிரபாவுடன் முக்கிய சந்திப்பு

(கிளிநொச்சி)

**தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரனுக்கும் நோர்வேக் குழுவுக்குமிடையிலான சந்திப்பு நாளை காலை 10 மணிக்கு விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் நடைபெறவுள்ளது.**

**இதன்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் உடனிருப்பார்.**

**நோர்வே தரப்பில் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன், பிரதிவெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன், விசேட சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.**

தலைவர் வே.பிரபாகரனின் அழைப்பின் பேரில் இன்று காலை இலங்கைக்கு வரும் அன்ரன் பாலசிங்கம் கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து உலங்குவானூர்தி மூலம் வன்னிக்குச் செல்வார்.

வன்னி செல்லும் அவர் உடனடியாகவே தலைவர் வே.பிரபாகரனைச்சந்தித்து மந்திர ஆலோசனையில் ஈடுபடுவார்.

இன்று இலங்கைக்கு வரும் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை இன்று மாலை சந்தித்துப் பேசவுள்ளார்.

பின்னர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்துப் பேசுவார்.

இதேவேளை நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன், சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் நேற்று எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கா, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், நிதியமைச்சர் சரத் அமுனுகம ஆகியோரை சந்தித்து சுனாமியால் ஏற்பட்ட சேதவிபரங்கள் குறித்தும் சமாதான நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடினர்.

பல்வேறு தரப்பினரினதும் கருத்துக்களை தெரிந்து கொண்ட நோர்வேக் குழுவினர் நாளை விசேட உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சி செல்வர்.

அங்கு தலைவர் பிரபாவுடனான பேச்சின்போது சுனாமி அனர்த்தத்தின் பின்னரான களநிலைமைகள் பற்றியும் சமாதான முயற்சிகள் குறித்து அரசியல் கட்சிகளின் நிலைப்பாடு என்பன குறித்து விளக்குவார்கள்.

விடுதலைப் புலிகளுடனான சந்திப்புக் குறித்த செய்தியை நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதியியைச் சந்தித்து தெரிவிப்பார்.

சமாதான முயற்சிகள் ஒரு புறமிருக்க சுனாமி அனர்த்தத்தினால் அழிந்துபோன பிரதேசங்களை மீளப்புனரமைப்பது தொடர்பில் இணக்கப்பாடுகளை எட்டவும் நிதிப் பங்கீடுகள் குறித்தும் அலசி ஆராயப்படவுள்ளது. (ச-4)

## கூட்டமைப்புடன் இன்று சந்திப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கும், தமிழ்த தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையிலான சந்திப்பொன்று இன்று கிளிநொச்சியில் இடம் பெறவுள்ளது.

சுனாமி அனர்த்தம் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்தும் அந்தப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவேண்டிய புனரமைப்புப் பணிகள் குறித்தும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-04)

## உயிரிழந்த அனைவருக்கும் முல்லையில் அந்தியேட்டி

சுனாமி கடல் அனர்த்தத்தால் கடந்த மாதம் 26ம திகதி முல்லைத்தீவு மாவட்டத்தில் மரணமான அனைத்து மக்களுடைய அந்தியேட்டி கிரியைகள் எதிர்வரும் திங்கட்கிழமை மாலை முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு அருகாமையில் நடைபெறவுள்ளது.

மறுநாள் ஆலயத்தில் ஆழிப்பேரலையினால் மரணமானவர்களுக்கான ஆத்ம சாந்தி பூசையும் விசேட பிரார்த்தனையும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆழிப்பேரலையினால் மரணமானவர்களுடைய நெருங்கிய உறவினர்கள் அல்லது உரித்துடையவர்கள், 24 ஆம் திகதி காலை வற்றாப்பளை அம்மன் ஆலயத்திற்கு வருகை தருமாறு ஏற்பாட்டாளர்களும் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பரிபாலன சபையினரும் கேட்டுள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் 2,750 இற்கு மேற்பட்டவர்கள் இந்த அனர்த்தம் காரணமாக மரணமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# பக்கச் சார்புகள் எதுவுமின்றி நிவாரணப்பணி தொடர வேண்டும்

### அரசிடம் நோர்வே குழு கோரிக்கை

சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவிதமான பக்கச் சார்புமின்றி நிவாரணம் வழங்கப்படவேண்டும் என்று இலங்கை அரசாங்கத்திடம் நோர்வே வேண்டுகோள் விடுத்துள்ளது.

புனர்வாழ்வு, புனரமைப்புப் பிரதியமைச்சர் டி.எம்.தஸநாயக்காவுடன் நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன் தலைமையிலான குழுவினர் நேற்று நடத்திய பேச்சுவார்த்தையின்போதே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தையில் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிறஸ்கர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

வடக்கு கிழக்கு பிரதேங்களில் நிவாரண மற்றும் புனருத்தாரண நடவடிக்கைகள் சிறந்த முறையில் இடம்பெறவில்லை என தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக நோர்வேப் பிரதிநிதிகள், பிரதியமைச்சரிடம் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த பிரதியமைச்சர் அங்கு ஒரு பிரச்சினை இருக்கிறது. நாங்கள் உதவிகளை மேற்கொள்ளப் போனால் நேரடியாக அரசாங்கத்தின் ஒத்துழைப்பினை வழங்க முடியாதுள்ளது. இது கவலைக்குரிய விடயம்.

எமக்கு இடமளிக்கப்படுமானால் அவற்றை விரைவில் வழங்க முடியும் ஒத்துழைப்பினை வழங்கி அந்தப் பிரதேசங்களில் அபிவிருத்தியை மேற்கொள்ள நாம் தயாராகவே உள்ளோம். அதனை மேற்கொள்ளும் ஆற்றல் எமக்குள்ளது.

அப் பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமாயின் எமக்கு விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்புத் தேவை. அதனைப் பெற்றுத் தருமாறு நோர்வேப் பிரதிநிதிகளிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

இதேவேளை சுனாமித் தாக்கத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட ஆசிய நாடு

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமித் தாக்கத்தை சாதகமாக்கி அரசியல் இலாபம் தேடுகிறது அரசு

### பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் குற்றச்சாட்டு

சுனாமி பேரலைத்தாக்கத்தினால் ஏற்பட்ட நிலைமையினை சாதகமாக வைத்து அரசாங்கம் அரசியல் இலாபங்களைப் பெறுவதற்கு முயற்சிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜி.எல்.பீரிஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

எதிர்வரும் 5 வருட காலப்பகுதியில் தேர்தல் நடைபெறமாட்டாது என ஜனாதிபதி அம்பாந்தோட்டையில் கூறியதன் உண்மையான அர்த்தத்தை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

ஜனாதிபதியின் உரையின் காரணமாக சந்தேகம் ஒன்று எழுகின்றது. அவர் தனது அரசியல் மற்றும் தனிப்பட்ட செயற்பாடு

(14 ஆம் பக்கம் பார்க்க)

# இன்று ஒரு தகவல்

## காகம்

யாராவது திரும்பத் திரும்பச் சத்தம் போட்டுக் கொண்டிருந்தால் "ஏன் இப்படிக் காகம் மாதிரிக் கத்துகிறாய்?" என்று கேட்பது உண்டு. அப்படிக் கேட்பவரும் சத்தமாகத்தான் கேட்பார். இப்படிக் கத்துபவர்களுக்கெல்லாம் அறிவில்லையென்று கூறிவிட முடியாது.

ஏனென்றால் பறவை இனத்திலேயே அதிக அறிவுள்ளது காக்கை தான் என்று விலங்கியல் நிபுணர்கள் சொல்கின்றனர். அவர்கள் கூறுவது உண்மையாகத் தான் இருக்கும் ஏனென்றால் காகத்தைக் காக்கா பிடிக்க வேண்டுமென்ற அவசியம் அவர்களுக்கு இல்லை. இப்போது நம்மைப் பார்த்து ஒருவர் சார்! உங்களுக்கு அறிவு அதிகம் என்று சொன்னால் நாம் சந்தேகப்படலாம். அதில் ஒரு நியாயமும் உள்ளது. ஆனால் காக்கை விடயத்தில் சந்தேகப்பட வேண்டியதில்லை.

காக்கை இனத்தில 32 வகை உண்டாம். உலகம் முழுவதும காக்கைகள் பரவியுள்ளனவாம். முக்கியமாக நாம் ஐந்து வகையான காக்கை இனங்களைப் பார்க்கலாம். அதில் இரண்டு வகையை அண்டங்காக்கை என்று சொல்கிறோம். மற்ற மூன்று வகையை காகம் என்று சொலகிறோம். எல்லாக் காகங்களும் கறுப்பு நிறம் தான். யாராவது வெள்ளைக் காகம் பறந்ததைப் பாரதேன் என்று சொன்னால் அவர் கொக்கு பறப்பதைத்தான் சொல்கிறார் என்று அர்த்தம்.

காகத்தின் நீளம் சுமாராக 16 அங்குலத்திலிருந்து 20 அங்குலம் வரையும் இருக்கும். அண்டங்காகத்தின் நீளம் 26 அங்குலம் வரை இருக்கும். சாதாரண காகங்கள் மனிதர்கள் வாழும் பகுதிகளிலேயே வசிக்கும. மரததில் பாறைப் பொந்துகளிலெல்லாம் காக்கையின் கூடுகளைப் பார்க்கலாம்.

காகததிற்கு காலில் பலம் அதிகம். எதை வேண்டுமானாலும சாப்பிடும். சில காக்கைகளில் நிற வேறுபாடு இருப்பதும் உண்டு. வீட்டில் நாய், பூனை, கிளி போன்றவற்றை வளர்க்கிறோம் அல்லவா இதுபோல் சிலர் காகத்தையும் வளர்ப்பது உண்டு.

அண்டங்காகத்திற்கு அறிவு அதிகம். கறுப்பாக இருந்தாலும அதிக பளபளப்பாக இருக்கும். சின்னச் சின்ன வார்த்தைகளைச் சொல்லிக் கொடுத்தால் கிளி மாதிரித் திருப்பிச் சொல்லும். உலகத்திற்கு முதன் முதலில நோவாவின் படகிலிருந்து அனுப்பப்பட்ட பறவை அண்டங்காக்கை தான் என்று பைபிள் சொல்லுகிறது. காடுகளிலும் மலைகளிலும் இது அதிகமாக வசிக்கும். இது தனது கூட்டை உயரமான மரம், பாறை உச்சி ஆகிய இடங்களில் தான் கட்டும். உயர்ந்த இடத்திலேயே தான் இருக்க வேண்டுமென்பது அதன் ஆசை போலும்.

ஒரு பெண் காகம் மூன்றிலிருந்து எட்டு முட்டைகள் வரை இடும். இந்த முட்டைகள் லேசான பச்சை நிறமாக இருககும். அதன் மேல் பொடி நிறமான புள்ளிகளும் இருக்கும். பெண்களின் கூந்தலுக்கு நமது கவிஞர்கள் மேகத்தின் நிறத்தை ஒப்பிடுவது வழக்கம். மேல் நாட்டுக் கவிஞர்கள் காகத்தின் நிறத்தை ஒப்பிடுவது வழக்கம். அதுவும அண்டங்காகத்தின் நிறத்தை தான் கூந்தலுக்கு உவமையாகச் சொல்வார்கள்.

காகத்தையெல்லாம் பெண்களின் கூந்தலுக்கு ஒப்பிடுவதோடு வைத்துக்கொள்வதுதான் நல்லது. பெண்களுடன் ஒப்பிட ஆரம்பித்தால் நிலைமை விபரீதமாகிவிடும். "நீ மயில் மாதிரி இருக்கிறாய்" என்று கூறினால் சந்தோஷப்படுவார்கள். "நீ காகம் மாதிரி இருக்கிறாய்" என்று கூறினால சண்டைக்கு வருவார்கள். அதனால் உவமை சொல்லும் போது ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

போர் நடக்கும் போது இராணுவத் தளங்களில் காவல் போடுவார்கள். இரவு நேரக் காவல். அதுபோல சில காகங்கள் இரவு நேரத்தில் காவலாளியாக வேலை செய்யும். ஏதாவது ஆபத்து வந்தால் கத்திச் சத்தம் போட்டு மற்றவற்றை எழுப்பி விடும்.

தாவரங்களை அழிக்கக்கூடிய பூச்சிகளைக் காகம் சாப்பிடுவதில்லை. அது நமக்கும் உதவி செய்கிறது. உலகம் முழுவதும் காகம் இருக்கிறது. ஆனால் நியூசிலாந்தில மட்டும் இல்லையாம். அது போல் இந்தியாவின் கொடைக்கானலில் காகம் இல்லை என்று ஒரு நண்பர் சொன்னார்.

ஒரு விலங்கியல் பேராசிரியர் காகங்களைப் பிடித்துக் கொண்டு போய் கொடைக்கானலில் விட்டுப் பார்த்தாராம் அவை திரும்பி வந்து விட்டனவாம். இதற்கு விஞ்ஞான பூர்வமான காரணம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை. யாருக்காவது தெரிந்தால் சொல்லுங்கள் அது ஒருநாள் தகவலுக்கு உதவும்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# யாழ். பல்கலைக்கழக 2004/2005 கல்வியாண்டு மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்தில் 2004, 2005 கல்வி ஆண்டிற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான அனுமதிக் கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் பல்கலைக்கழக பரீட்சைகளும் அனுமதியும் கிளையில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு துணைவேந்தர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ் அறிவித்துள்ளார்.

விவசாயக் கற்கைநெறி மாணவர்களுக்கான பதிவுகள் எதிர்வரும் 25 ஆம் திகதி மேற்கொள்ளப்படவுள்ளது. உயிரியல் விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞான கற்கைநெறி மாணவர்களுக்கான பதிவுகள் 26 ஆம் திகதியும் வர்த்தகம் மற்றும் முகாமைத்துவ கற்கைநெறி மாணவர்களுக்கான பதிவுகள் 27 ஆம் திகதியும் நடைபெறும்.

கலைத்துறை மாணவர்களுக்கான பதிவுகள் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் 3 ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது.

சித்த மருத்துவம், சட்டம் ஆகிய கற்கைநெறி மாணவர்களுக்கான பதிவுகள் முறையே 7 ஆ[ம்] திகதியும் 10 ஆம் திகதியும் நடைபெறும்.

அனைத்து மாணவர்களுக்குமான பதிவுகள் காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை நடைபெறவுள்ளது. பதிவுசெய்த மாணவர்களின் விபரங்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்குப் முன்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்ப வேண்டியுள்ளதால் பதிவுகளை உரிய திகதிகளில் மேற்கொள்ளுமாறு துணைவேந்தர் கேட்டுள்ளார்.

இதேவேளை விவசாயக் கற்றைநெறி எதிர்வரும் 7 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. வர்த்தகம், முகாமைத்துவம் மற்றும் கலைப்பிரிவிற்கான கற்கைநெறிகள் எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகும். பௌதிக விஞ்ஞானம் மற்றும் உயிரியல் விஞ்ஞான கற்கைநெறிகள் ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதியும் சித்தமருத்துவம் மார்ச் மாதம் 21 ஆம் திகதியும் ஆரம்பமாகவுள்ளது.

சட்டக் கற்றைநெறி ஆரம்பமாகும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என துணைவேந்தர் அறிவித்துள்ளார். (ச-9[5])

## ஆழிப்பேரலை தாக்கிய அம்பாறை மாவட்டத்தில்

# அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க எட்டு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் சுனாமி ஆழிப்பேரலை அனாத்தததினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புவதற்காக அரசாங்க அதிபா ஹேரத் அபயரத்ன தலைமையில் 8 செயலணிக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

நலன்புரி நடவடிக்கைகள், நிவாரணம், தற்காலிக இருப்பிட வசதி, சூழல் சுகாதாரம், அடிப்படை வசதிகள், புனாநிாமாணம், மீள்குடியேற்றம் மற்றும் தொழில் வாய்ப்பு ஆகிய தலைப்புக்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள இநத செயலணிக் குழுவில், அரசாங்க அதிகாாிகள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொண்டர் நிறுவன பிரதிநிதிகள், விடுதலைப்புலிகள், படை அதிகாரிகள் ஆகியோா அங்கம் வகிக்கின்றார்கள்.

இந்த செயலணிக் குழுக்கள் மாவட்ட ாதியாகவும், பிரதேச செயலக ாதியாகவும் செயல்படும். இதேவேளை இம் மாவட்டத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான நிவாரணப் பணிகள் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை துரிதப்படுத்துவதற்காக இரு அதிகாாிகள் மேலதிக அரசாங்க அதிபர்களாக பொது நிர்வாக அமைச்சினால் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

அமபாறை மாவட்ட செயலகத்தில் தமிழ் தொிந்த அதிகாாிகள் இல்லாத காரணத்தினால் நிவாரணப் பணிகளில் பல நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம வட- கிழக்கு மாகாண ஆணையாளா ஏ.கே. பத்மநாதன் தமிழ்ப் பிரதேசங்களுக்கும், அட்டாளச்சேனை பிரதேச செயலாளா எம்.வை அசீஸ் முஸ்லிம் பிரதேசங்களுக்கும் மேலதிக அரசாங்க அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். (ப-4)

# இராசி பலன்

**21.01.2005**
**(தை 8 வெள்ளிக்கிழமை)**
**ஏகாதசி முற்பகல் 8.51மணிவரை**
**ரோகிணி பி.ப. 04.58 மணிவரை**
**இராகுகாலம் 11.05 - 12.35 மணிவரை**
**சுபநேரம் 6.35 - 08.05 மணிவரை**
**ஏகாதசி விரதம்**

**மேடம்** அமைதிக் குறைவு, எதிர்பாராத செலவு, தொழில் முயற்சி, தெய்வ தரிசனம்

**இடபம்** பெரியோர் ஆதரவு, நண்பர்கள் சந்திப்பு, திடீர் நன்மை, சயன சுகம்

**மிதுனம்** எடுத்த கருமங்கள் தாமதமாகும், எதிர்பாராத செலவு, மனக்கிலேசம், தொழில் மந்த நிலை

**கடகம்** செய்தொழில் முன்னேற்றம், நண்பர்கள் உதவி, தனலாபம், காரிய சித்தி

**சிங்கம்** அதிகாரம், தூரதேச செய்தி, தொழில் நன்மை, தடைப்பட்ட காரியம் கைகூடும்

**கன்னி** சத்துரு பயம், முயற்சி தாமதம், பிரயாணக் கஷ்டம், ரோக நிலை

**துலாம்** கலகம், கௌரவக் குறைவு, காரிய தாமதம், பிரயாண பயம்

**விருச்சிகம்** எடுத்த கருமங்கள் கைகூடும், தெய்வ தரிசனம், தேக நலன், கீர்த்தி

**தனுசு** மனமகிழ்ச்சி, சுபகாரியம், ஆரோக்கியம, பகைவர் நேசம

**மகரம்** நண்பர்கள் விரோதம், சிறுவியாதி, முயற்சி தாமதம், தொழில் சிந்தை

**கும்பம்** உடல் நலக் குறைவு, நண்பர்கள் சந்திப்பு, மனச்சோர்வு, காரிய தாமதம்

**மீனம்** பிரயாண நன்மை, அந்நியர் சந்திப்பு, சகோதரர் உதவி, தொழில் நன்மை

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது - வளவன்

# அம்பாறையில் ரணில்

(அம்பாறை)

எதிாக்கட்சித் தலைவா ரணில் விக்கிரமசிங்க நேற்று அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களுக்கு பயணம் செய்து சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தததினால் ஏற்பட்ட பாதிப்புக்களையும் அழிவுகளையும் பார்வையிட்டார்.



மயோன் முஸ்தபா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அவருடன் ஐ.தேக. நாடாளுமன்ற உறுப்பினர பலரும் அப்பிரதேசத்திற்கு சென்றிருந்தாகள். பொாிய நீலாவணை, மருதமுனை, கல்முனை காரைதீவு,சாய்ந்தமருது, நிந்தவூா ஆகிய இடங்களிலுள்ள நலன்புாி நிலையங்களுக்கும் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் தெரிவித்தனர். (ப-4,8)

# உயிரிழந்தோர் தொகை 38,322 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

சுனாமி பேரலைத் தாக்கத்தினால் இலங்கை யில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 38 ஆயிரத்து 322 ஆக அதிகரித்துள்ளது. காணாமல் போனவர்களாக அறிவக்கப்படுபவர்களின் எண்ணிக்கையானது நாளாந்த மாற்றத்தைக் கருத்தில் கொள்ளும் போது தொடர்ந்தும் அதிகரிக்கலாம என அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திலக் ரணவிராஜா தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இடம்பெயர்ந்து வாழபவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்களில் ஒரு பகுதி நிதியாகவும் வழங்கப்படவுள்ளது. இதற்கமைய 375ரூபா பெறுமதியான நிவாரணத்தில் 175 ரூபா பெறுமதி வாய்ந்த பொருட்களுடன் 200ரூபா பணமாகவும வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.(ரு-4)

# கூட்டமைப்பினுள் குழறுபடிகள் வலுக்குமானால் நாம் தனித் தீர்மானம் எடுக்கவேண்டி ஏற்படும்

## எச்சரிக்கிறார் ஜே.வி.பி.தலைவர் சோமவன்ஸ அமரசிங்க

(கொழும்பு)

**ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான இணைவு தொடர்பில் சில விடயங்களில் பாதிப்புக்கள் ஏற்படினும் நாம் தனித்தீர்மானம் எடுக்கவேண்டி ஏற்படும் என ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க எச்சரித்துள்ளார்.**

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையேயான இணைவு தொடர்பில் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டு ஒருவருடம் நிறைவுபெற்றுள்ளது. ஒருவருட பூர்த்தியை ஒட்டி நடைபெற்ற நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மற்றும் ஜே.வி.பியின் பாராளுமன்ற, மாகாணசபை, பிரதேச உறுப்பினர்கள் உட்பட மக்கள் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர்.

அங்கு சோமவன்ஸ அமரசிங்க மேலும் கருத்துரைக்கையில்,

இரண்டு கட்சிகளும் பல விடயங்களில் இணக்கப்பாடு கண்டுதான் ஒரு வருடத்திற்கு முன்னர் கூட்டு அமைப்பதற்கு உடன்பட்டு ஒப்பந்தம் கைச்சாத்திட்டோம.

ஆனால், தற்போது இணக்கம் காணப்பட்ட பல விடயங்களை அரசாங்கம் தட்டிக்கழித்து போக்கிலித்தனமாக நடந்து கொள்வதுடன் அதறகமைய நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றது.

இதுதொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த முக்கியஸ்தர்களைப் பலமுறை சந்தித்து எமது அதிருப்தியை வெளிப்படுத்தி நிலைமையை விளக்கினோம்.

இந்தநிலை மாறவேண்டும். அதாவது அரசு இவ்வாறான பொறுப்பற்ற நடவடிக்கைகளை மாற்றவேண்டும். அதைவிடுத்து இவ்வாறான செயற்பாடுகள தொடர்ந்தும் நடைபெறுமானால் எதிர்காலத்தில் நாம் இறுதித் தீர்மானங்களை எடுக்கவேண்டிவரும்.

எமக்கிடையேயுள்ள கொள்கைகளை கௌரவத்தைப் பாதுகாத்துச்செயற்படுவதில் இது வரையில் முரண்பாடுகள் தோன்றவில்லை. ஆனால் ஒரு வரை ஒருவர் கலந்தாலோசித்து இணக்கப்பாட்டுடன் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில்லை. ஒரு சிலர் தமது சகோதரக கட்சியுடன் பேச்சு நடாத்துவதை விடுத்தும் தான் சார்ந்தகட்சியுடனும் பேச்சை நடாத்தாமலும் தன்னிச்சையாக முடிவுகளை எடுக்கின்றனர். இத்தகைய செயற்பாடுகள் கூட்டமைப்பின் எதிர்காலப் பயணத்துக்கும ஒற்றுமைக்கும் பெரும் குந்தகத்தையே விளைவிக்கும்.

இணக்கப்பாடுகள், பேச்சுவார்த்தைகள் மற்றும் தீர்மானங்கள் தொடர்பாக கூட்டமைப்புக்கு மத்தியில் கொள்கை ரீதியில் பொதுவானதொரு கருத்து இருக்கவேண்டும். இதனை ஏற படுத்துவதற்கான போராட்டத்தை கூட்டமைப்புக்குள் முன்னெடுத்துள்ளோம். இன்று சிலர் அரச அதிகாரத்தை மேலேயுள்ள தேவர்கள் தமது கைகளுக்குக் கொடுததுள்ளது போன்ற ஆணவத்துடன், அகங்காரத்தின் ஆட்சியில் ஊழல் மோசடிகள் தலைதூக்கும் வகையில் செயற்படுகின்றனர்.

இது தனிப்பட்டவர்களின் வெற்றியல்ல, ஸ்ரீலங்கா, சுதந்திரக் கட்சியுடன் நாம் கூட்டுச் சேர்ந்ததால் கிடைத்தவெற்றி என்பதை அனைவரும் உணர வேண்டும். எது எப்படியிருப்பினும், கடற்கோள் அனர்த்தத்திற்குப்பின்னர் பலவற்றை மறந்து அனைவரும் ஒன்று சேரும் கட்டாயம் ஏற்பட்டிருந்த போதிலும், கூட்டமைப்பினுள் இருக்கும் குறைபாடுகளைப் போக்குவதறகான நடவடிக்கைகளையும மேற்கொள்ள வேண்டிய நிலை எமக்கு உருவாகியுள்ளது.

இந்த முடிவினை கூட்டமைப்பைப் பாதுகாக்க வேண்டுமென்ற நினைப்புடனேயே மேற்கொள்வோமே தவிர, கூட்டமைப்பை அழிக்கும் நோக்கில் அல்ல. நாடு பாரிய அழிவைச் சந்தித்துள்ளநிலையில் குறிகிய மனோநிலையில் இருந்து விடுபட்டு பரந்தளவில் சிந்தித்துச்செயற்பட எம்மால் முடியாது போகுமானால் இந்த அழிவை எதிர்கால சுபீட்சத்தின் விதையாக மாற்ற முடியாமல் போகும்.

அன்று அரசியல் ரீதியில் ஐக்கிய தேசியக்கடசியின் தலைவர் ரணில விக்கிரமசிங்க நாட்டை விடுதலைப் புலிகளுக்குப் பிரித்துக் கொடுக்கும் நிலையிலேயே எமது கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு நாடு பிளவுபடாமல் பாதுகாக்கப்பட்டு மக்களுக்கு பல நன்மைகளையும் வழங்கியது.

இன்று நாடு பாரிய இயற்கை அழிவுகளைச் சந்தித்திருக்கும் நேரத்தில் கூட்டமைப்பின் பலத்தை ஸ்திரப்படுத்தி பரந்தளவிலான தேசிய மற்றும் சர்வதேச இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள வேணடும். முதலில் எமது கூட்டமைப்பின் ஒற்றுமையை சக்திமிக்கதாக நிலைநிறுத்திக்கொள்ள வேண்டும. அதில் விரிசல்களை, பலமிழந்த நிலையை உருவாக்கிக் கொண்டு புதியதொரு பரந்தளவிலான இணைப்பை எவ்வாறு ஏற்படுத்திககொள்ள முடியும்? இதற்கான காலம் இன்று உருவாகியுளளது.

யாராவது எம்மைக் குறைத்து மதிப்பிட்டிருந்தால் அந்தக்கனவிலிருந்து விடுபட வேண்டும். இந்த ஒருவருடப்பூர்த்தி இதற்கு உகந்த காலமாகும். தனிப்பட்ட நிகழ்சசி நிரல்கள் எமக்கென்று எதுவும் இல்லை. தேசிய நோக்குடன் கூடிய பரந்தளவான நிகழ்ச்சி நிரலையே நாம் பின் பற்றுகிறோம். பின்பற்றிவருகின்றோம்.

எனவே, எமக்குத் தீர்மானங்களை மேற்கொள்வது மிகவும் இலகுவான காரியமாகும். தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்கள் உள்ளவர்களால் அமைக்கப்படும் தடைச்சுவாகள் நாம் முடிவெடுபபதற்கு முட்டுக்கட்டைகளல்ல. எனவே, இறுதியில் முக்கியமான தீர்மானங்களை எடுக்கவேண்டிய நிலை எமக்கு உருவாகும். அதற்குத் தேவையான அரசியல் வழிகாட்டலை எமது மக்களுக்கு வழங்கத் தயாராகவே உள்ளோம எனவும் குறிப்பிட்டார். (ந-4)



## தமிழ்த்துறை தலைவராக கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா

(யாழ்ப்பாணம்))

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவராக கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா ஜனவரியில் இருந்து நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முதல் இப்பதவியில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்))

'பொப்லெப்' செயல்திட்ட ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிாவரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.3.00 மணிக்கு யாழ்.வலயக் கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே,. சகல பொப்லெப் செயல்திட்ட ஆசிரியர்களையும் இக்கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார். (ந-5)

## பதவியுயர்வு

(யாழ்ப்பாணம்))

யாழ்.மாவட்ட மதுவரித் திணைக்களத்தில் மதுவரி அத்தியட்சகராகக் கடமையாற்றிய வி.கிறிஸ்ரியோசப் உதவி மதுவரி ஆணையாளராகப் பதவியுயர்த்தப்பட்டுள்ளார்.

இதேபோன்று பிரதம மதுவரிப் பரிசோதகராகக் கடமையாற்றிய என்.சோதிநாதன் மதுவரி அத்தியட்சகராகப் பதவியுயர்த்தப்பட்டுள்ளார். (ந-19)

## தட்டச்சு பரீட்சை

(சாவகச்சேரி)

கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் இன்று நடைபெறவிருந்த தட்டச்சுப் பரீட்சை தவிர்க்கமுடியாத காரணத்தால் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறும் என்றும் மற்றய பரீட்சைகள் குறிப்பிட்ட ஒழுங்கின்படி நடைபெறும் என்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (க-29)

# புலிகளின் நிவாரண உதவிகளுக்கு கனேடிய தொலைக்காட்சி பாராட்டு

இலங்கைத் தீவில் சுனாமி அனர்த்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினதும் விடுதலைப் புலிகளினதும் நிவாரணப் பணிகள் நேர்த்தியான முறையில் முன்னெடுத்துச் செல்லப்படுவதாக கனேடிய தேசிய தொலைக்காட்சி பாராட்டியுள்ளது.

சி.பி.சி. தொலைக்காட்சியின மூத்த செய்தி ஆய்வாளா பிரையன் ஸ்ருவேட் என்பவரே இந்தப பாராட்டைத் தெரிவித்துள்ளார்.

சி.பி.சி. தொலைக்காட்சி நேற்றிரவு ஒளிபரப்பிய செய்தித் தொகுப்பில் பிரையன் ஸ்ருவேட இவ்வாறு கூறியுள்ளார்.

கடநத கால போராட்ட அனுபவங்களும் கட்டுக்கோப்பான ஒழுங்கு முறைகளுமே இந்த நிவாரணப் பணிகளை வடக்கு கிழக்கில் திறமையாக செயற்படுத்த முடிந்தது எனவும் பிரையன் ஸ்ருவேட் தெரிவித்துள்ளார்.

சுனாமியின் தாக்கத்தின் பின்னர் தென்னிலங்கை மற்றும் தமிழர் தாயகப் பகுதிகளுக்கு சி.பி.சி.தொலைக்காட்சி பயணம மேற்கொண்டு நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் நேரடியாக வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ப-4)

# பிக்குமார் குழுவொன்று முல்லைத்தீவிற்குச் செல்லும்

(கொழும்பு)

கதிர்காமம் திஸ்ஸரமவிலிருந்து முல்லைத்தீவிற்கு எதிர்வரும் 26ஆம் திகதி வணக்கத்திற்குரிய மாதம்பே அஸ்வஜித தேரோ தலைமையிலான பௌத்த பிக்குமார் குழுவொன்று யாத்திரை செல்லவிருக்கின்றது.

யுத்தத்திற்கு எதிரான அமைப்பைச் சேர்ந்த இந்த பௌத்த பிக்குமார்கள் குழு ஓரிரு நாட்கள் வன்னியில் தங்கியிருந்து பல்வேறு தரப்பினரையும் சந்திப்பதோடு ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட சகல இடங்களையும் நேரில் சென்று பார்வையிடவுள்ளார்கள்.

நேற்று முன்தினம் குறிப்பிட்ட மதகுருமார் குழு நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்மை கொழும்பில் சந்தித்து உரையாடியுள்ளனர். கொழும்பிலுள்ள நோர்வே தூதரகத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பில் ஆழிப் பேரலையினால் சேதமடைந்த மத வழிபாட்டுத் தலங்களைப் புனரமைப்பதற்கு நோர்வேயின் உதவியை நாடியுள்ளனர். (ப)

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணி குறித்து ஹெல உறுமய எம்.பி. பாராட்டு

சுனாமி பேரலையினால் பாதிக்கபபட்ட வடக்கு,கிழக்கு மக்களுக்குத் தேவையான நிவாரணப் பணிகளை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் சரியானமுறையில் மேற்கொண்டு வருவதை சகலரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென ஜாதிகஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் வணக்கத்திற்குரிய அதுரலிய ரட்ணதேரர் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையின் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டுப் படைகள் தமது கடமைகள் முடிந்தவுடன் தமது நாட்டிற்குத் திரும்பிவிட வேண்டுமென்று அவர் வலியுறுத்தினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின்போதே இதனைத தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மனிதாபிமான அடிப்படையில் உதவிகளை செய்து வருகின்றது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் என்பது எதற்கு சார்பானது? எந்த அமைப்புடன் தொடர்புடையது? என்பது குறித்து எவரும் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. ஆனால் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உண்மையில் வடக்கு-கிழக்கில் சுனாமி பேரலையினால் பாதிககப்பட்ட மக்களுக்குத் தேவையான உதவிகளை செய்து வருவதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இதேவேளை, இலங்கையில மீட்புப்பணிகளை மேற்கொண்டு வரும் வெளிநாட்டு இராணுவத்தின் சேவைகளையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

ஆனால் மீட்புப்பணிகள் முடிவடைந்தபின்னர் இராணுவம் திரும்பிவிடவேண்டும். அதற்கு பிறகு இவர்கள் இலங்கையில் இருப்பதை ஏற்றுக கொள்ளமுடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-9)

# சிறுவர் பாதுகாப்பு நிதியம் உலருணவு உதவி வழங்கல்

இலங்கைக்கான சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் யாழ். மாவட்ட அலுவலகம், சுனாமியினால பாதிக்கப்பட்ட ஒன்பது இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் 2ஆயிரத்து 997குடும்பங்களுக்கு அதன் பங்காளித்துவ நிறுவனங்கள் மூலம் உலர் உணவுகளை வழங்கியுள்ளது.

இந்த உணவுப் பொதிகளில் அரிசி, சீனி, பருப்பு, பிஸ்கட், சோயா, ரின்மீன், சம்போசா உட்பட மேலும் சில பொருட்கள் அடங்கியிருந்தன என சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் பங்காளித்துவ அபிவிருத்திக்கான முகாமையாளரான திருமதி ஞானச்செல்வி சிங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மேற்படி நிறுவனத்தின் திட்டப் பங்காளிகளாக வெண்புறா, அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், சிறுவா அபிவிருத்திக்கும் பால்நிலைககுமான அமைப்பு, அறவழிப் போராட்டக்குழு ஆகியவை வளங்கிவருகின்றன. (ப-16)

## துடுப்பாட்டப் போட்டி

கொக்குவில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்படும் விகரம், ராஜன், கங்கு ஞாபகார்த்த அணிகளுக்கிடையிலான துடுப்பாட்டப்போட்டி நாளை சனிக்கிழமை கொககுவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இபபோட்டியில் யாழ்.பல்கலைக் கழக அணி, யாழ்.பற்றீசியன் விளையாட்டுக்கழகம், கொக்குவில மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம், ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் ஆகிய அணிகள் பங்குபற்றுகின்றன. (ப-9)

## மீள் பார்வை

# யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்

**வேலணை பண்டிதர் பொ.ஜெகந்நாதன்** 44

இப்படியே பாட்டுக்களும் சொல்லிக் கொண்டு தேவாலயத்தைப் பற்றிய ஒழுங்குகளும் பண்ணிக் கொண்டு திரும்பினான் (யா.வை.மா. பக் 32.33)

வைபவமாலை இவ்வமைச்சர் தான் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைக் கட்டினான் என்று சொல்ல,அப்படி இல்லை என்று வேறு பிறர் மறுக்கிறார்கள். அவன் பாடிய அப்பாடல்களளைத் தவறான ஆராய்வினால் அத் தமிழ் அறியாத சிங்கள புத்த மன்னனான செண்பகப்பெருமாள் தான் பாடினான் என்று பிறர் புரைபாடாக மொழிகின்றனர். அமைச்சர் புவனேகபாகு பத்தாம் நூற்றாண்டு வரையில் வாழ்ந்தார். இந்நிகழ்ச்சிகள் நிகழ்ந்து ஐந்நுறு ஆண்டுகள் வரையில் வாழ்ந்தார். இந்நிகழ்ச்சிகள் நிகழ்ந்து ஐந்று ஆண்டுகள் பின்னரன்றோ அப்பெருமாள் பிறந்தான் அவன் காலம்15 ஆம் நூற்றாண்டு அவனால் எப்படி இவ்வெண்பா யாப்புக்கள் பாடமுடியும் எப்படிச் சைவசமயத்துள் வழங்கும் பழங்கதைக்ளைச் சேர்க்க முடியும் இவ் வமைச்சர்தான் முத்துராசக்கவிராசர்க்கு அந்த மதிப்புரை வெண்பாவைக் கொடுத்திருக்கக் கூடுமென்பது நம்மூகம். இப்பாட்டின் அமைப்புக்கள் அம் மதிப்புரை பாடலை ஒத்திருக்கின்றன. நல்லூர் கந்தசுவாமி கோயில் கட்டிய புவனேகபாகு.

"இலக்கிய சகாப்த மெண்ணூற்றெழுபதாமாண்டதெல்லை
அலர் பொலி மாலை மார்பனாம் புவனேக பாகு
நலமிகு யாழ்ப்பாண நகரி கட்டுவித்து நல்லைக்
குலவிய கந்த வேட்குக் கோயிலும் புரிவித்தானே" என்றும்

கைலாயமாலைப் பாவினால் குறிக்கப்படுகின்றான். இலக்கிய சகாப்தம் எண்ணூற்றெழுபதாம் ஆண்டு கி.பி.948ஆம் ஆண்டாகும். அவ்வாண்டிலே தான் யாழ்ப்பாணத்து நல்லூர் நகரியை கட்டுவித்ததும் நல்லூரில் உள்ள கந்தவேளுக்குக் கோயில் கட்டுவித்ததும் இப் புவனேகபாகுவின் வேலை. சிலர் சிங்களச் செண்பகப்பெருமாளுக்குப் புவனேபாகு என்ற பெயருண்டென்றும் அவன் இக் கோயிலைக் கட்டினான் என்றும் சொல்கின்றனர். அவனின் நல்லூர்க்காலம் கி.பி. 1450- 1467 ஆகையால் இப்பாட்டு அவனைக் குறிக்கக் காலம் பொருந்தாது அன்றியும் ஸ்ரீசங்கபோதி என்ற பெயரோ அரசனுக்குரிய அடையோ இதில் இல்லை.

அன்றியும் சிங்கையாரிய மகாராசன் இப்படியே அரசாட்சியைக் கையேற்று நடத்தி வருகையில் புறமதில் வேலையையும் கந்தசுவாமி கோயிற்றிருப்பணியையும் சாலிவாகன சகாப்தம் எண்ணூற்றெழுபதாம் வருஷத்திலே புவனேகபாகு என்னும் மந்திரி நிறைவேற்றி முடித்தான் என்று வைபவமாலையும் சொல்கின்றது. (யா.வை.மா.பக் 31-32)

செண்பகப்பெருமாள் காலத்திலே நல்லூரிலே ஆட்சி கொடுங்கோலாய் நடந்தது. தமிழரை உடை நடை பாவனையில் தங்களைப் போலாக்க வேண்டுமென்று பலவந்தம் பண்ணியும் அதற்கமையாதவர்களைத் தண்டித்தும் வந்தார்கள் என்றும் வைபவமாலை சொல்லுகின்றது. செண்பகப்பெருமாள் கீரிமலைக்குப் போய்த் தீர்த்தமாடுவதும், அப்பால் சிவாலயத்துக்கும் கந்தவேன் ஆலயத்துக்கும் போய்ச் சுவாமி தரிசனம் செய்வதும் சின்ன மனத்தார் விருந்திடுவதும் அவ் விருந்தைப் பாராட்டி தமிழ் வெண்பாப் பாட்டுக்கள் பாடுவதும் அசம்பாவிதமான காரியங்களாகும். சாலிவாகன சகாப்தம் 717 வரையில் வசித்த பெரிய மனத்தாரின் மூன்றாவது பேரன் சின்ன மனத்தார் காலமும் சாலிவாகன சகாப்தம் 870இல் வசித்த அமைச்சர் புவனேகபாகு காலமும் ஒன்று. அன்றியும் நல்லூர்க்கந்தசுவாமி கோயிற் கட்டியத்திலே அக்கோயிலைக் கட்டியவன் "சூரியகுலவம் சோத்பவன்"என்றும் சொல்லப்படுகிறது. அதாவது சூரிய குலத்துதித்தவன் என்றும் சொல்லப்படுவதால் அது செண்பக பெருமாளைக் குறிக்காது. அமைச்சர் புவனேகபாகுவையே குறிக்குமென்க. ஆகவே இப்புவனேகபாகு தான்.

1. நல்லூர்க் கட்டியத்தில் சூரியகுலவம் சோத்பவன் என்றுசொல்லப்பட்டவர்.
2. சின்ன மனத்தான் விருந்தைப் பாடியவர்.
3. நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைக் கட்டடியவர்.
4. நல்லூர்த் தலைநகர் கட்டியவர்.
5. கைலாயமாலை நூலுக்கு மதிப்புரை அளித்தவர் ஆவர்.

## 36.சிங்கை நகர்

### சிங்கை நகர் இருந்த இடத்தை எழுத்தோடு காட்டுவோம்

ஆராய்ச்சிக்காரரால் இன்றுவரையும் அறுதியிட்டுரைக்க அதாவது ஐயம் நீங்கி உறுதியாக உரைக்க இயலாததாயுள்ள ஊகம் ஒன்றானே உரைக்கப்பட்டு வந்த சிங்கை நகரையாம் கையும் மெய்யுமாக அது இருந்த களத்தோடும் எழுத்தோடும் காட்டுவோம் வண.சு. ஞானவாக்காக உரைக்கப்படுவது சிங்கை நகர் வல்லிபுரத்தில் இருந்ததெனக் கொள்ளுதல் அமைவுடத்தாயின் பறங்கிக்காரர் 1590இல் கொழும்புத்துறையில் இறங்கி நல்லூரைச் சருவிய காலையில் சிங்கை நகர் என்னும் பெயரோடு ஓர்பெலத்த அரண் இருந்ததென பாதர் குவிறோஸ் கூறுகின்றமை (Conquista p.367)எவ்வாறென ஓர் ஆசங்கை நிகழும் பூர்வ சிங்கை நகர் கொழும்புத்துறைக்கும் நல்லூருக்கும் இடையிலாமெனக்கொள்க. வேறு சான்றின்மையால் அச்சிங்கைநகர் அழிந்துபட்டு நல்லூர் தலைநகராயின பின் அப்பழைய நகர்ப்பெயரோடு ஓர் அரண் இங்கு விளங்கியதெனக்கொள்ளலாம் என்க என்கிறார் (யா.வை.வி.பக் 68) சரி இவ்வரணுக்குச் சிங்கை நகர் என்று யார் எழுதினார் எப்பொழுது எழுதப்பட்டது.

அமைச்சர் புவனேகபாகுவால் தலைநகர் கட்டிய போது எழுதப்பட்டது அஃது எங்ஙனம் தெரியுமாறு எனின் தலைநகர் கட்டி முடிந்த பின்னர் முடிசூடப்படுவது வழக்கம் அந்தச் சோழ இராசகுமாரன் நல்லூரில் நகரை அமைச்சரைக் கொண்டு கட்டியபின் முடிசூடப்படும் பொழுது முடிசூடப்படும் அரசனுக்கு சிங்கையாரியச் சக்கரவர்த்தி என்று கங்காதரக்குருக்கள் முடிசூட்டி இருக்கிறார் அந்த முடியை பாண்டிமழவன் எடுத்துக் கொடுத்திருக்கிறான் (அவன் முடி தொட்டுத் தொடுக்கும் பரம்ரையைச் சேர்ந்தவன்) இங்கே விளங்கக்கிடப்பது நல்லூர் ஆரியச்சக்கரவர்த்தி என்று சொல்லாமல் சிங்கை ஆரியச்சக்கரவர்த்தி என்பதால் நல்லூரில் கட்டப்பட்ட தலைநகர்க்குச் சிங்கை என்பது பெயர் என்பது விளங்குகிறது.

முதற் சிங்கையாரியன் தொடக்கம் 11ஆவது அரசன் கனகசூரியன் வரை ஒரே கோட்டையல் அன்றி ஒரே அரண்மனையிலோ அன்றி பெயரே சிங்காசனத்திலே இருந்துதான் அவ்வரசர் அரசு புரிந்திருக்கிறார்கள் ஏனெனில் அவ்வளவு காலமும் ஒரு போரோ படையெடுப்போ அங்கே இல்லை ஆகையால் தலைநகர் மாற்றமில்லை அப்பால் கி.பி. 1450 ஆம் ஆண்டளவில் கனகசூரியன் காலத்தில் தான் செண்பகப்பெருமாள் படைஎடுத்திருக்கிறான். நல்லூர்க்கு அப்பொழுது செண்பகப்பெருமாள் வெல்ல கனகசூரியன் நகரை விட்டோடி விட்டான் .திரும்பக் கனகசூரியன் வந்து அவ்விடத்தில் அரசு செய்த விஜயபாகுவை அதாவது செண்பகபெருமாளின பிரதிநிதியை வென்று அரசனாகிவிட்டான். அதன் பின்னர் கனகசூரியன் மக்கள அத் தலைநகரில் இருந்து ஆட்சி செய்தார்கள் அவர்கள் சிங்கை நகரத்தரசர்கள் என்பதற்காகச் சிங்கைபரராசசேகரன், சிங்கைச் செகராசசேகரன் என்று பெயர் வைத்துக்கொண்டார்கள் எனவே இவர் காலம் வரைக்கும் தலைநகரோ தலைநகர் இருந்த களமோ இடம்மாறவில்லை.

(தொடரும்)


**யா/அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி.**

ATTIAR HINDU COLLEGE NEERVELI
TRUTH IS LIGHT

**பவளவிழா நிறைவு நிகழ்வுகள்**

**இடம்**

**கல்லூரி பிரார்த்தனை மண்டபம்**

1 ஆம் நாள் 21.01.2005 வெள்ளி மு.ப.9.30 மணி
விடயம்:- பரிசளிப்பு விழா
2 ஆம் நாள் 22.01.2005 சனி பி.ப. 2.30 மணி
விடயம்:- பவளவிழா மலர் வெளியீடு

*தங்களை அன்புடன்அழைக்கின்றோம்.*

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
கல்விசாரா அலுவலர்கள், பவளவிழாச்சபை,
பா.அ.சங்கம், ப.மா.சங்கம்.

**1ஆம் நாள் 21.01.2005 வெள்ளி மு.ப.9.30மணி**
**பரிசளிப்பு விழா**

(பாடசாலை கோட்ட மட்டங்களிலும் கழகங்களுக்கிடையிலும் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு)

**தலைவர்**
திரு. இ. குணநாதன் (கல்லூரி முதல்வர்)

**பிரதம விருந்தினர்**
திரு.இந்திரன் காராளசிங்கம்
(தொழிலதிபர்-கொழும்பு)

**சிறப்பு விருந்தினர்கள்**
திரு. பொ. சிவசுப்பிரமணியம்
(உறுப்பினர்,பழைய மாணவர் நலன் விரும்பிகள் சங்கம் U.K)
திரு. ஆ. கணபதிப்பிள்ளை
(உறுப்பினர், நீர்வேலி நற்பணிச்சங்கம் Swiss)

**கௌரவ விருந்தினர்கள்**
திரு. க.சங்கர்
(பொறுப்பாளர், வலிகிழக்கு அரசியல்துறை)
திரு. இ. கிருபானந்தன்
(இணைப்பாளர், நீர்வேலி நற்பணிச்சங்கம் Swiss)
திரு. ச. புவிச்சந்திரன்
(உரிமையாளர், வினோ நகைப்பூங்கா, யாழ்ப்பாணம்)

**1ஆம் நாள் நிகழ்ச்சிகள்**

மங்கள விளக்கேற்றல்
இறைவணக்கம
சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்டோருக்கான பிரார்த்தனை
அகவணக்கம்
ஆசியுரை
பிரம்மஸ்ரீ கு.தியாகராஜக் குருக்கள்
உப தலைவர் ப.வி. சபை
வரவேற்புரை—
கலாநிதி தா. அமிர்தலிங்கம் (பிரதி அதிபர்)
தலைமை உரை
விருந்தினர் உரை
மாணவர் நிகழ்ச்சிகள்
பரிசளிப்பு
நன்றியுரை
திரு. சு. சண்முகவடிவேல்
செயலாளர், ப.வி.சபை.

**2ஆம் நாள் 22.01.2005 சனி பி.ப. 2.30 மணி**
**பவளவிழா மலர் வெளியீடு**

மலர் ஆய்வுரை
கலாநிதி. எஸ்.சிவலிங்கராஜா
(தலைவர்,தமிழ்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**தலைவர்**
திரு. இ. குணநாதன் (கல்லூரி முதல்வர்)

**பிரதம விருந்தினர்**
திரு.ப.விக்னேஸ்வரன
(வலயக்கல்விப் பணிப்பாளர்,யாழ்.வலயம்)


**சிறப்பு விருந்தினர்கள்**
திருமதி.அ.சாந்தசீலன் (பிரதேச செயலர், கோப்பாய்)
திரு. இ.சிவஞானசுந்தரம் (கேட்டக்கல்வி அதிகாரி,கோப்பாய்)

**கௌரவ விருந்தினர்கள்**
திரு.சி.இளம்பரிதி (யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்)
திரு.பொ.சிவதாசன்
(உப தலைவர், பழைய மாணவர் நலன் விரும்பிகள் சங்கம் U.K)

**2 ஆம் நாள் நிகழ்ச்சிகள்**

மங்கள விளக்கேற்றல்
இறை வணக்கம்
அகவணக்கம்
வரவேற்புரை
திரு.சி.தர்மரத்தினம் (பொருளாளர், ப.வி.சபை)
தலைமை உரை
விருந்தினர் உரை
இதழாசிரியர் உரை—
திரு.ஐ.சிவராஜா - இதழாசிரியர்
மலர் ஆய்வுரை
மலர் வெளியீடு — பிரதம விருந்தினர்
மலர் பிரதிகள் வழங்கல்
நன்றியுரை— திரு.த.பரராஜசிங்கம் J.P
(உறுப்பினர், ப.மா.சங்கம்) (9236)

# ஆனந்த வாழ்வு பெற ஆர்வமுடன் கற்போம்



வாழ்வியல் பாடத்தை எவ்வாறெல்லாம் கற்கிறோம், அனுபவிக்கின்றோம். ஆனால் அவையெல்லாம் கற்றல் அல்ல என்று பகவான் எமக்கு விளக்கம் கூறுகின்றார். உண்மையான கற்றல் என்பது நாம் நமக்குத் தெரியாதவைகளைக் கற்க ஆவலுடன், திறந்த மனதுடன் உள்ளபோதுதான் நிகழும். மனக்கதவுகளை புதிய உண்மைகளுக்கு மூடியிருக்கும் போதல்ல. நாம் நம்மை எந்த விதத்திலும் பந்தித்துக்கொள்ளக் கூடாது. ஒன்றை அனுபவிக்கும் முன்னரே அதைப்பற்றிய பயம் நம்மை ஆட்கொண்டு விடுகிறது. நாம் உண்மையாகக் கற்கவேண்டுமெனில் எல்லாவிதமான அனுபவங்களையும் வரவேற்க வேண்டும். அவற்றைத் தேர்ந்தெடுத்தல் கூடாது. அவற்றை வாழ்வின் நடைமுறை எனக் கருதி முழுமையான நம்பிக்கையோடு நோக்கவும் நமக்குள் ஒளிந்து கிடக்கும் திறமைகளை வெளிக்கொணரவும் ஏதுவாகும்.

வாழ்கை என்பது நம் ஆன்மீக வளர்ச்சிக்கான ஒரு பள்ளிக்கூடம்.

நம்வாழ்வில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒவ்வொரு மனிதரும், ஒவ்வொரு சூழ்நிலையும் நாம் கற்பதற்காகவே உள்ளன. இவற்றிலிருந்து தப்பிக் கொள்ள முற்பட்டால் நம் வாழ்வு பின் தங்கிவிடுகிறது. எனவே நம்முள் ஏற்படும் பரிணாம வளர்ச்சியே வாழ்வின் குறிக்கோள் என யாரால் புரிந்துகொள்ள முடிகின்றதோ அவர்களால் கற்றுக்கொள்ள முடியும். கற்றலின் வழிமுறையில் ஒரு முக்கிய விஷயம் வாழ்வின் நிலைமையைப் பற்றி பெரும்பாலும் சுய பச்சாதாபத்தில் உழல்கிறோம். நாம் நம்மை நியாயப்படுத்திக் கொள்ளவோ, காப்பாற்றிக் கொள்ளவோ இவ்வாறு செய்கையில் உண்மையைப் புரிந்து கொள்ளத் தவறிவிடுகின்றோம். இதனால் இன்னும் தவறான கண்ணோட்டம் ஏற்பட்டு நம் துன்பம் அதிகரிக்கின்றது. எவ்விதத்திலும் நியாயப்படுத்துவதற்கு முயற்சிக்காமல் உண்மையை நேருக்குநேர் பார்க்கும் திறமையிருந்தால் உண்மையாகக் கற்கமுடியும்.

## வெள்ளிநற்சிந்தனை

மனம் பலவிதமான தந்திரங்களைப் பயன்படுத்தி கற்பதைத் தடைபோட முயற்சிக்கின்றது. தான் உயிர்த்திருக்க மனம் செய்யும் வழிகள் தான் இவை. இவைகளில் முக்கியமான ஒரு தந்திரம் 'தள்ளிப் போடுதல்' அல்லது காலம் தாமதித்தல் என்பது. நாம் வாழ்வின் அடிப்படைக் கேள்விகளுக்கு பதிலைத் தேடும்போது மனது இன்னும் சிறிது வயதாகட்டுமே பார்க்கலாம் எனச் சமாதானம் கொடுக்கும். இதற்கு ஸ்ரீகல்கி பகவான் கூறுகின்றார் 'தள்ளிப் போடுதல்' என்பது கப்பல்கள் துறைமுகத்தில் பாதுகாப்பாக உள்ளன.

ஆனால் அவை அதற்காக உருவாக்கப்பட்டவை அல்ல. அவைகள் கடலில் மிதந்து சென்று அவற்றின் பணியைச் செய்யவேண்டும். அதுபோல நாம் கற்கும் வழியிலிருந்து நிரந்தரமாகத் தப்பிக் கொள்ள இயலாது. அது நிகழவேண்டும் அது நம் அடிப்படைத் தேவை. நாம் இதிலிருந்து தப்பித்து ஓடமுடியாது. நம் பாதை எதுவாயினும் வாழ்வின் ஓட்டத்தோடு செல்லுதல் வேண்டும். கர்ம பூமியில் செயல்கள் செய்தே ஆகவேண்டும் தப்பவே முடியாது.

ஆகவே, எதையும் மனந் திறந்து கற்கவேண்டும். கற்க வேண்டும் என்ற ஆவலோடு கற்கவேண்டும். எனவே வாழ்க்கை ஒரு சுமையல்ல. அது ஒரு கற்பதற்கான பரிசு. அகவே ஆனந்தமான வாழ்வு மலர வேண்டுமாயின் ஆர்வத்துடன் கற்கவேண்டும் என்றே கல்கி தர்மம் கூறுகின்றது. □

**திருமதி கலாசுந்தரேசன்**
ஆசிரியர் கொக்குவில் இந்துக் கல்லூரி

# செய்தித்துளிகள்

## ஒலிபெருக்கி அன்பளிப்பு

(சங்கானை)

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஒலிபெருக்கி சாதனம் ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளார்.

கடந்த புதன்கிழமை வலி. மேற்கு உதவி பிரதேச செயலரினால் இவ் ஒலிபெருக்கி சாதனம் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் தலைவரிடம் கையளிக்கப்பட்டது. (க-20)

## சிறப்புச் சொற்பொழிவு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையினால் வெள்ளிக்கிழமை தோறும் நடாத்தப்பட்டு வரும் வராந்த நிகழ்வுத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சிரேஷ்ட விரிவுரையாளர் சு.குமாரவேல் பெரிய புராணத் தொடரில் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (ற-35)

## இலவச நூல்கள் விரைவில் விநியோகம்

(மருதங்கேணி)

எதிர்வரும் ஏப்ரலில் ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருந்து சமயத்தில் ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக புத்தகங்கள், குறிப்புகள், பதிவுகள் போன்றவற்றை இழந்த பல நூற்றுகணக்கான தமிழ் மாணவர்களுக்கு பிறைட் புத்தக நிலையம் ஒரு தொகுதி நூல்களை தைமாத இறுதியில் பாடசாலைகள் ஊடாக இலவசமாக கையளிக்கவுள்ளது.

இதனால் தேவையான புத்தகங்களின் தொகையைக் கணிப்பிட்டுத் தருமாறு பாடசாலைகளை பிறைட் புத்தக நிறுவனம் வேண்டியுள்ளது.

பிறைட் புத்தக நிலையம் (வரைவுள்ளது) 5-27 முதலாம் மாடி கொழும்பு மத்திய சந்தைத் தொகுதி கொழும்பு 11 என்னும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளுமாறும் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு அறிவித்துள்ளது. (க-35)

## இயந்திரங்கள் பழுது பார்த்தல்

(மருதங்கேணி)

சுனாமி கடற் பேரலையின் போது வடமராட்சி கிழக்கில் சேதமடைந்த வெளியிணைப்பு இயந்திரம், யமகா இயந்திரங்களை திருத்துவதற்கு, யமகா இயந்திரங்களை வழங்கிய நிறுவனத்தினர் கடந்த 17 ஆம் திகதி தொடக்கம் இரண்டு கிழமைக்கு வடமராட்சி கிழக்கு கடற் றொழிலாளர் சமாசத்தில் தங்கியுள்ளனர்.

இயந்திரங்களை (யமகா அவுட்டோர் மோட்டாரை) மேற்படி நிறுவனத்தில் எடுத்தவர்கள் உடனடியாகத் தங்கள் இயந்திரங்களைக் கொண்டுவந்து திருந்துமாறு யமகா பிளாஷா உரிமையாளர் இந்திரகுமார் கேட்டுள்ளார். (ற-35)

## பொதுக் கூட்டம்

(சங்கானை)

வலி.மேற்கு பிரசேத சபைக்கு உட்பட்ட நல்லொழுக்க சம்ளேனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு சித்தன்கேணி காரியாலயத்தில் சி.இராசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.(க-20)

* * *

(சங்கானை)

வலி.மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் சமாச பொதுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு சுழிபுரம் பிரசேதசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (க-20)

## வல்லைப் பாலம் சனி இரவு மூடப்படும்

(யாழ்ப்பாணம்)

நாளை சனிக்கிழமை இரவு 8.30 மணி முதல் மறுநாள் அதிகாலை 5.30 மணிவரையும் வல்லைப் பாலத்தின் ஊடான போக்குவரத்துக்கள் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திருத்த வேலைகளுக்காகவே மேற் குறிப்பிட்ட பாலம் ஊடான போககுவரத்துக்கள் குறித்த தினத்தில் நடைபெறாது என செயற்றிட்டப் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (க)

# 'சுனாமி' நிவாரணக் கூப்பன் வழங்குவதில் தமிழ்ப் பிரதேசங்கள் புறக்கணிப்பு

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படவிருக்கும் நிவாரணக் கூப்பன்கள் தமிழ்ப பிரதேசங்களுக்கு அனுப்பி வைப்பதிலும் அரசாங்கம் பாகுபாடு காட்டுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூபா 350 பெறுமதியான நிவாரணக் கூப்பன்கள் தற்போது அனைத்து மாவட்டங்களுக்கும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் பாதிக்கப்பட்ட ஒருவர் வாரத்தில் ஒரு தடவை ரூபா 350 பெறுமதியான உணவுப் பொருட்கள் உட்பட அத்தியாவசியப் பொருட்களை பலநோக்கு கூட்டுறவுக் கடைகள் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 3 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதால் இக் கூப்பன்களை பெறுவதற்கு அவர்கள் தகுதி பெற்றுள்ளார்கள். ஆனால் 70 ஆயிரம் கூப்பன்களே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மாவட்ட செயலகத்திலிருந்து கூப்பன்களை பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பி வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனை எந்த அடிப்படையில் பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பி வைப்பது என தன்னால் தீர்மானிக்க முடியாது இருப்பதாக மாவட்ட அரசாங்க அதிபர் வேல் முருகு சண்முகம் தெரிவித்தார். குறைந்த தொகைக் கூப்பன்கள் அனுப்பி வைக்கப்படுவதால் தங்களால் பொறுப்பேற்க முடியாது என பிரதேச செயலாளர்கள் தன்னிடம் தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்த வரை 1 இலட்சத்து 92 ஆயிரம் பேர் இந்த கூப்பன்களைப் பெறத்தகுதி பெற்றுள்ளார்கள். ஆயினும் 50 ஆயிரம் கூப்பன்களே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இக் கூப்பன்களை அரசாங்க அதிபர் ஹேரத் அபயரத்ன ஒரு பிரிவிற்கு 5 ஆயிரம் என்ற அடிப்படையில் 10 பிரதேச செயலாளர்களுக்கும் பகிர்ந்தளித்துள்ளார்.

ஆனால் பிரதேச செயலாளர்கள் அதனை மக்களுக்கு பகிர்ந்தளிக்கத் தயக்கம் காட்டி வருகின்றார்கள். இது தொடர்பாக திருக்கோவில் பிரதேச செயலாளர் கே.தவராஜா கருத்து வெளியிடுகையில், தனது பிரதேசத்தில் 3 ஆயிரத்து 899 குடும்பங்களைச் சேர்ந்த 19 ஆயிரத்து 899 பேர் இதனை பெறத்தகுதி பெற்றுள்ளார்கள்.

ஆனால் 5 ஆயிரம் கூப்பன்களே வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இதனை யாருக்கு வழங்குவது. எப்படி வழங்குவது என்று தன்னால் தீர்மானிக்க முடியாதுள்ளது என்றார். அச்சடிக்கப்பட்ட பின்பு புதிய கூப்பன்கள் அனுப்பி வைக்கப்படும் என அதிகாரிகள் கூறினாலும் அது எப்போது வந்து சேரும் என்று தங்களால் கூற முடியாமல் இருப்பதாகவும் அவர் கூறினார். (ப-4)

# வட-கிழக்கில் 57 பாடசாலைகளில் ஆங்கில மொழிமூல பாடபோதனை

## இவ்வாண்டு முதல் ஆரம்பம்

(மருதங்கேணி)

வடக்கு- கிழக்கு மாகாணத்திலுள்ள 57 அரச பாடசாலைகளில் இவ் ஆண்டு தொடக்கம் ஆங்கில மொழிமூலம் பாடபோதனைகள் மேறகொள்ளப்படவுள்ளதாக மேலதிக மாகாணக்கல்வி பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்டுள்ள சில பாடசாலைகளில் ஆங்கில மொழிமூலமாக பாடபோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இத் திட்டத்தின் கீழ் தரம் 6 தொடக்கம் கல்விப் பொதுத் தரா தர உயர்தரம் வரை சகல பாடங்களும் ஆங்கில மொழிமூலம் கற்பிக்கவுள்ளதாக மேலதிக கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

மாணவர்களுக்குத் தேவையான ஆங்கில மொழிமூலமான பாடநூல்களை தேசிய கல்வி நிறுவனத்தின் உதவியுடன் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் அச்சிட்டுவெளியிட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபடும் ஆசியர்களுக்கான பயிற்சிகளை கல்வி அமைச்சு வழங்கியுள்ளது. வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 57 அரசாங்கப் பாடசாலைகளிலும் 4 தனியார் பாடசாலைகளிலும் பரீட்சார்த்த அடிப்படையில் ஆங்கில மொழிமூலமான பாடபோதனைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ற-35)

## அருள் ஜோதி வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

சபரிமலை ஸ்ரீசாஸ்தாபீடம் மற்றும் சர்வதேச இந்துமத குருபீடத்தினால் மாதாந்தம் வெளியிடப்படும் அருள்ஜோதி 'ஐப்பசி - கார்த்திகை மாத இதழ்-2004' அண்மையில் வெளிவந்துள்ளது. (க)

# 7 வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டி

(சுண்டுக்குளி)

பலவருட கால இடை வெளியின் பின் யாழ். உதைபந்தாட்ட லீக் அதில் அங்கம் வகிக்கும் கழக அணிகளுக்கிடையே 7 வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டிகளை நடாத்தத் தீர்மானித்துள்ளது.

7 வீரர்கள் பங்குபற்றிய போட்டிகள் அந்நாட்களில் ரசிகர்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்திருந்த போதிலும் அவ் ஆட்டத்தினால் வீரர்கள் அடையும் பயன்களிலும் பார்க்கப் பாதிப்பே அதிகம் என உதைபந்தாட்ட வல்லுநர்கள் தெரிவித்த கருத்தினாலேயே இப் போட்டிகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது.

ஆனால், அண்மைக் காலத்தில் 7 வீரர்கள் பங்குபற்றும் போட்டிகள் பற்றிய ஆய்வை மேற்கொண்ட வல்லுநர்கள், இப்போட்டிகளை நடாத்துவதால் வீரர்களுக்கு பாதிப்பு ஏற்படாது என்று கூறியதனால் மீண்டும் சர்வதேச ரீதியில் இப் போட்டிகள் நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-110)

# சண்டேலீடரின் பிரதம ஆசிரியர் நீதிமன்றத்தில் சரணடைந்தார்

(கொழும்பு)

கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் கடந்த செவ்வாய்க் கிழமை பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சண்டேலீடர் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பிய அவர் சட்டத்தரணி ஊடாக நீதிமன்றத்தில் ஆஜரானதையடுத்து இவரது பிடியாணையை நீதிபதி எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜா ரத்து செய்யும் உத்தரவைப் பிறப்பித்தார்.

சிறிலங்கா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத்தலைவர் திலங்க சுமதிபால தாக்கல் செய்துள்ள மனுவொன்றில் நீதிமன்றத்தை இவர் அவமதித்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான வழக்கு விசாரணையின் போதே இந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இதற்கிடையில் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபரான மொகமட் ரியாஸ் நவ்பர் நேற்றுமுன்தினம் கொழும்பு பிரதம நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜர் செய்யப்பட்டார்.

இவரது சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணியொருவர் ஆஜராக முன் வந்த போது ஏனைய சட்டத்தரணிகள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதையடுத்து, நீதிமன்ற நடவடிக்கைகள் சுமார் 30 நிமிடங்கள் தடைப்பட்டிருந்தன. (ப)

# இலங்கைப் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவோம்

3

(தொடர்ச்சி....)

5. *கேள்விமிக்க சிறு கைத்தொழில்களை அத்துறை சார்ந்தவர்கள் பரப்புதல்:* சுனாமியின் தாக்கத்தினால் கரையோர மக்கள் இதுவரை செய்துவந்த தொழிலை இழந்த நிலையில் தனியாரோ அல்லது அரசோ கொடுக்கின்ற சிறிய முதலீட்டுப் பணத்தினைக கொண்டு என்ன தொழில் ஆரம்பிக்க வேண்டும் ஏனும் தீர்மானம் எடுப்பதற்குள்ளே பணம் நுகாவுக்கென செலவாகிவிடும். சுய தொழிலுக்கென கடன்வழஙகுவோர் போதுமான ஆலோசனைகள், கண்காணிப்பினை வழங்குவதில்லை என்பது இலங்கை கிராமியத்துறை தொடர்பான பொதுவான குற்றச்சாட்டு. இதற்குப் பழக்கப்பட்டுவிட்ட மக்களிற்கு இன்றைய சூழ்நிலையில் கேள்விமிகக சிறுகைத் தொழில்களை இனங்காட்ட வேண்டியது மிகமிக அவசியமாகும்.

6. *பொருளாதார நிபுணர்கள் தாமாக முன்வந்து ஆலோசனை வழங்குதல்:* பொருளாதாரம் அறிந்தவர்கள் தமது கருத்துக்களை தாமே பரிசீலித்துக் கொண்டோ அல்லது பொருளாதார நடத்தைகளை தாம் மட்டும் பின்பறறி ஒழுகுவதோடு நின்றுவிடாது நாட்டிற்கும் வழிகாட்ட வேண்டும். இதற்கெல்லாம் நேரமிலலை எனக் கூறிக்கொள்ளாது தாமாக இலங்கையை மீண்டும் கட்டியெழுப்ப முன்வர வேண்டும். "எமது வளவை யார் சுததப்படுத்துவது?"

7. *பொதுமக்கள் மீன் உணவுக்குச் சமனான வேறு போசாக்கு மிக்க உணவிற்கு மாறுதல்:* மீன் இனங்களும், மீன்பிடித்தொழிலும சீரகுலைந்துள்ளது. இதனால் வெளிநாட்டு மீன் பொருட்களை மக்கள் அதிகமாக விரும்புவார்கள். குறைந்தசெலவில் கலோரிப் பெறுமானம் மிக்க உணவாக மன் பொருட்கள் காணப்பட்டாலும் அதற்குச் சமமாக சோயா, அவரை போன்ற போசாக்கு மிகுந்த உணவுக்கு மக்கள் மாறுவதன் ஊடாக இறக்குமதிச் செலவு போன்ற பொருளாதாரச் செலவுகளைக் குறைத்து பொருளாதார வளாச்சியினை துரிதப்படுத்த முடியும்.

8. *சமூக, பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளின் புனரமைப்புக்குத தனியார் துறையினர் முன்வருதலும் அரசாங்கம் அவற்றுக்கு வரவேற்றலும், வாய்ப்பளித்தலும்:* அரச பொருளாதாரங்கள் சந்தைப் பொருளாதாரங்களை நோக்கி மாறிக்கொண்டிருக்கினறன. சுருங்கக் கூறின் பொருளாதாரங்கள் தனியார்மயமாகி வருகின்றன. இதற்குப் பிரதான காரணம் அரச இயக்கிகளின் செயற்திறனற்ற தனமையாகும்.

இதையுணர்ந்து மாறிவரும் பொருளாதாரங்களாக சீனா, ரஷயா, ஆர்மோனியா போன்றனவற்றைக் கூறலாம். அண்மையில் கூட பாதிக்கப்பட்ட நாடுகளிற்கு வழங்கப்படும் நிவாரண உதவிகள் செயற்றிறன் மிக்கதாகப் பயனபடுத்தப்படுகின்றதா எனக் கண்காணிக்க ஐ.நா.சபை தனியார் நிறுவனமொன்றையே நாடியுள்ளது. இலங்கைப் பிரஜையாக இருந்து என்ன செய்யலாமென்றால் உட்கட்டமைப்பு வசதிகள் புனரமைக்கும் பொறுப்பை விரைவும், வினைதிறனும் மிக்க தனியாரிடம் ஒப்படைக்குமாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் தெரிவிக்கவேண்டும்.

9. *அரசாஙக இயநதிரத்தினை வினைத்திறனுடன் செயற்படுதலை உறுதிப்படுத்தல்:* சில அமைச்சின் பொறுப்புக்களை தனியார்மயமாக்க அரசும், மக்களும் விரும்புவதில்லை. இதற்குப் பல காரணங்களை அரசாங்கத்திற்காதரவாகக் கூறலாம. இவ்வாறான நேரத்தில் வெளிநாட்டு உதவிகளாகட்டும், பொருளாதார மீட்சியாகட்டும், செயற்திறன் மிக்கதாக அமைவதும், விடுவதும் அரசாங்க இயந்திரத்தின் கைகளிலே உள்ளது.

உதாரணமாக அரசாஙகத்தின் ஊடான வெளிநாட்டு உதவிகள் உரியநேரத்தில வறியமக்களைச் சென்றடையாவிட்டால் அவாகளின் கல்லறைக்கற்கள் வாங்குவதற்கே பயன்படும்.

10. *நாட்டின் பொருள்தார நிலைமையை அரச ஊழியர் உட்பட சகலரும் உணர்தல்:* அரசாங்கத்தின கீழ் வேலை பார்த்தாலும் நாடடின் பிரஜை என்பதனாலும், மககளின் குறைகளைத் தீர்ப்பவர்கள் எனக் கருதப்படுவதாலும் இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் உங்களின் பங்கை அடிக்கடி நினைவுபடுத்துங்கள். உதாரணமாக அரசாங்கத்திற்கு எதிரான தொழிற் சங்கப் போராட்டங்களைத் தவிர்த்து வருதல். உண்மையில் இத்தகைய போராட்டங்கள் உங்களின் உரிமைகளை வென்று தரலாம். ஆனால் அரசாங்கம் இருக்கும் தற்போதைய நிலையில் தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதில் கவனம் திரும்பினால் பொருளாதாரத்தை சீர்செய்யும் நடவடிக்கை தடைப்பட வாய்ப்புண்டு.

11. *செல்வந்தர்கள் நிலைமைகளை உணர்ந்து வரி ஏய்புகளை நிறுத்தி பொருளாதார மீட்சிக்கு அரசாங்கத்துடன் இசைந்து பணியாற்றுதல்:* இது கொஞ்சம் கடினமான காரியமாகத் தோன்றலாம். இதுவரை காலமும இதற்குப் பழக்கப்பட்டுவிட்டனர். பொய்யான வருமானங்களைக் காட்டுவது, 'அரசாங்கமும் வரி ஏயபுகளை ஊக்குவிக்கும் விதத்தில் வரி விடுதலையளிப்பது என இரண்டு பக்கத்திலும் குறை நிறைகளைக் கூறலாம்.

இதனால் திடீரென அரசுக்கு கைகொடுப்பதும், கணக்கியல் இலாபம் தராத நடத்தைகளில் எவ்வாறு இறங்குவது என சிந்திப்பதற்கான நேரம இதுவல்ல. பொருளாதாரத்தின் தாக்கம் உங்கள கதவுகளைத் தட்டாது என ஒரு போதும் நினைக்கவேண்டாம். "ஒன்றிணைவோம, ஒத்துழைப்போம்!"

12. *பாடசாலைகளின் பாதிப்புக்களின் தன்மைகளை உரியவாகள் வெளியிடுதல்:* பாதிக்கப்பட்ட பாடசாலைகளின் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் நிதி சேகரிதது புனரமைப்பிற்கென வழங்குதல் பின்தங்கிய சில கரையோரப் பாடசாலைகள் உரியவர்களால் வெளியுலகிற்கு இனங்காட்டப்படாத நிலையில் அரச உதவியை மட்டும் எதிர்பாாத்திருப்பதனால் அதன் புனரமைப்புப் பணிகள் தாமதபபடுத்தப்படலாம். இதனால் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுவடுகின்றன.

13. *பத்திரிகை மற்றும் தொடர்பாடல் ஊடகங்கள் மக்களிடையே பொருளாதார நம்பிக்கையை கட்டியெழுப்புதல்:* உதாரணமாக "நாம் மீண்டும் கட்டியெழுப்புவோம்!", "எங்களுடன நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்" இவ்வாறான வாசகங்களை மக்களிடையே பரப்புதலும் பொருளாதாரம் பற்றிய தெளிவினை ஏற்படுத்துதல்.

இங்கு "நாம் கட்டியெழுப்புவோம!", "நீங்களும் இணையுங்கள்!" இவ்வாறான வாசகங்களை அடிக்கடி கேட்கும மககள் 'எதைக கட்டியெழுப்பவேண்டும், யாருடன இணையவேண்டும்' என குழம்பப் போய் இருக்கலாம். இவ்வேளையில் ஊடகங்கள் தமது பொருளாதார வளர்ச்சி தொடர்பான பங்களிப்பைக் காட்டமுடியும்.

14. *உதவி புரியவரும் வெளிநாட்டவருக்கு பலமாகவுள்ள இனவாதத்தைக் காட்டாமல் பாதிக்கப்பட்ட இலங்கையைக் காட்டுதல்:* உதவி புரியவருவோர் உண்மையான சேத விபரங்களை நேரடியாக அவதானிக்கும் போதுதான் சேதத்தின் தன்மைக்கேற்ப நிறைவான உதவிகளை அளிப்பார்கள்.

15. *பாதிக்கப்பட்ட பரிதாபத்தைப பார்த்து வழங்குகின்ற வெளிநாட்டு உதவிகள் பாதிவழியில் மறைந்து போவதை மக்கள் அல்லது மக்களின் பிரதிநிதிகள் பாராமுகமாக இருக்காது மோசடிகளைத் தடுத்தல்:* இனவாதம் ஒரு சாபக்கேடு என்றால மற்றொனறு ஊழல் மோசடிகள். இவற்றினால் உரியவாகள் "எதிர்கால சந்ததியினருக்கு துரோகம இழைத்துக் கொண்டிருக்கின்றனர்!" என்பதை மறக்க வேண்டாம். ஏன் உங்கள் பிள்ளைகள், பேரக்குழந்தைகளிற்குந்தான்!

16. *அரசாங்கம் இளையவர்களின் பொருளாதாரப் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளுதல்:* நாட்டின் அபிவிருத்தியினைக் காதலிக்கின்ற இலட்சக்கணக்கினாலான இளைஞர்கள், யுவதிகள சந்தர்ப்பங்கள் கிடைக்காமல் கீழுழைபபைப் பொருளாதாரத்திற்கு வழங்குகின்றனர்.

எடுத்துக்காட்டாக பட்டதாரிகளின் நிலைமைகளைக் கூறலாம். இவற்றுக்குப் பிரதான காரணம் கல்விக்கும் தொழில் வாய்ப்பிற்குமிடையே தொடர்பில்லாத தன்மையும், அரசதொழில் வேண்டுமென்ற மனப்பாங்குமாகும். இதற்கு அரசாங்கமே காரணமாகிவிட்டது.

17. அணுகுண்டின் தாக்கத்தினால் தரைமட்டமாக்கப்பட்ட யப்பான் பொருளாதாரம் வானைத் தொடுமளவிற்கு கட்டியெழுப்பப்பட்டதென்றால் அதற்குக் காரணம் தனித்து அரசாங்கத்தையோ அல்லது தனித்து மக்களையோ கூறமுடியாது. இதனை இலங்கை ஓர் பாடமாக எடுத்துக் கொள்ள வேண்டும். ஐக்கிய இலங்கைக்குள் இன, மத, சாதி வேறுபாடுகளை மறந்து நம் வீட்டுப் பிரச்சினையாகக் கருதி தியாகம், அர்ப்பணிப்பு, கடின உழைப்பு என மக்கள் அனைவரும் 'சுனாமி'யின் பொருளாதாரத தாக்கத்திற்கெதிராகப் போர்க்கொடி தூக்குவது காலத்தின் தேவையாகும்.

இவ்வாறு ஏனைய துறைகளுடன் பொருளாதாரம் தொடர்பாகவும் இலங்கையர் விழிப்புடன் இருக்கவேண்டும்! இவ்வாறு பொருளாதார நடவடிக்கைகளில் ஏதேனும் ஒரு வகையிலாவது பங்கேற்று "ஏற்படவிருந்த பொருளாதாரச் சரிவினை என் தோளிலும் சுமந்து கொண்டேன்!" என எமது பேரக் குழந்தைகளிற்கு சொல்லிப் பெருமைப்பட இன்றே முடிவெடுப்போம்! ஒன்றிணைவோம்!

(முற்றும்)

என்.சிவரூபன்
யா/வயாவிளான் ம.ம.வித்தியாலயம்

---

## 'இந்து தர்மாசிரியர் தேர்வு' இவ்வாண்டு முதல் அறிமுகமாகிறது

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் "இந்து தர்மாசிரியர் தேர்வு" எனும் பரீட்சையொன்றை இவ் (2005ஆம்) ஆண்டு முதல் அறிமுகப்படுத்துகின்றது.

இப்பரீட்சை, அறநெறிப் பாடசலைகளிற் பயிலும் இந்து மாணவர்களின் இந்துசமய அறிவை மேம்படுத்துவதை அடிப்படை நோக்கமாகக் கொண்டதாகும்.

இந்து அறநெறிப்பாடசாலை இறுதிநிலைப் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள், அல்லது க.பொ.த.(உ.த) பிரிவில் இந்து சமயம், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களுள் ஒன்றை, ஒரு பாடமாகக்கொண்டு சித்திபெற்றவர்கள் அல்லது பண்டிதர் பட்டம் பெற்றவர்கள், அல்லது சைவப் புலவர் பட்டம் பெற்றவர்கள் இப பரீட்டைசக்குத் தோற்றும் தகைமையுடையவர்கள் ஆவர்.

இப்பரீட்சை ஐந்து வினாப் பத்திரஙகளைக் கொண்டதாகும். இவை இந்துசமயம், இந்துசமய வரலாறு, தத்துவங்கள், பண்பாடடம்சங்கள், கலைகள், சைவ சமயம் போன்ற பல்வேறு விடயங்களையும் உள்ளடககியுள்ளன.

இவை முறையே வேதங்களும் ஆகமஙகளும், சமய ஞானிகளும் சமயப்பெரியார்களும், சைவசமய வரலாறு, பன்னிரு திருமுறைகள், கோயில்களும் கலைகளும் ஆகிய தலைப்புகளில் அமைகின்றன.

மேற்குறித்த ஐந்து வினாப் பத்திரங்களும், மிகவும் பரந்த, மற்றும ஆழமான விடயதானங்களைக்கொண்டவையாதலின் இந்து அறநெறிப் பாடசாலைகளுக்குப் பொறுப்பான அதிபர்கள், ஆசிரியர்கள் பரீட்சாத்திகளுக்குப் போதிய விளக்கமிளத்து ஊக்குவிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

ஐந்து வினாப்பத்திரங்களிலும், சித்திபெறும பரீட்சாத்திகள் 'தர்மாசிரியர்' எனும் சான்றிதழினைப்பெறும் தகைமை உடையவராவார். இந்த ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் மாதத்தில் இப்பரீட்சை நடைபெறும். இப்பரீட்சை தொடர்பான விதிகள், மற்றும் அறிவுறுத்தல்கள் என்பன கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வெளியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியில் அறிவிக்கப்படடுளளன.

அத்துடன் திணைக்களத்தின மூலம் அறநெறிப்பாட சாலைகளுக்குப் பாடத்திட்டம் மற்றும் மாதிரி வினாப்பத்திரத் தொகுதி என்பனவும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டு நடுப்பகுதியளவில் பரீட்சைத்திணைக்களம் விண்ணப்பங்களைக் கோரும் போது தகுதிமிக்க விண்ணப்பதாரிகள், தமது விண்ணப்பங்களைச சமர்பபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். (க-19)

---

## மற்றுமொரு பிரிட்டிஷ் கப்பல் மட்டு. கடலில் நங்கூரமிட்டுள்ளது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்புப்பணிகளை மேற்கொள்வதற்காக மேலும் ஒரு பிரிட்டிஷ் கப்பல் ஒன்று கல்லடி கடலில் நங்கூரமிட்டுள்ளது.

80மீட்புப் பணியாளர்களுடன் வந்துள்ள இக்கப்பலில் வைத்திய குழுவினரும் உள்ளனர்.

ஏற்கனவே 350 பிரிட்டிஷ் படையினருடனும் 3 ஹெலிகொப்டாகளுடனும் இரண்டு பிரிட்டிஷ் கப்பல்கள் வந்துள்ளன. இந்த 3 கப்பல்களுக்கும் ஒரு பிரிட்டிஷ் கடற்படைக் கப்பல் பாதுகாப்பு வழங்குகிறது.

இதேவேளை, இக் கப்பல்களில் இங்கு வந்துள்ள பிரிட்டிஷ் தொழில்நுடபக் குழுவினர் கோட்டைக் கல்லாறு மற்றும் பெரிய கல்லாறு ஆகிய பகுதிகளில் மீட்புப் பணிகளுக்கான தொழிலநுட்ப ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர். (ற)

---

## சேவையாற்றும் பிரதேசம் குறித்து அமெ.தூதரகமே முடிவு செய்யும்

### அமெ. வைத்திய நிபுணர் தெரிவிப்பு

இலங்கை வநதுள்ள அமெரிக்க வைத்தியர் குழு எந்தெந்தப் பகுதிகளில் பணியாற்ற வேண்டும் என்பதை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகமே தீர்மானிகக வேண்டும என அமெரிக்க கடற்படை வைத்திய நிபுணர் டொன் டேவிஸ தெரிவத்துள்ளார்.

இவரது தலைமையில் 20 போ கொணட அமெரிக்க வைத்தியர்கள் குழுவொன்று கடந்த திங்கட்கிழமை முதல் பருத்தித்துறை ஆதார வைத்தியாசலையில் சேவையாற்றி வருகின்றது.

குறிப்பிட்ட வைத்தியசாலையில் தமது சேவைக்காலம் 2 வார கலத்திறகே மட்டுபபடுததப்பட்டுள்ளதாகக் கூறிய அவ் வைத்திய நிபுணர், இலங்கையில் தங்களுடைய சேவை எவ்வளவு காலததற்கு இருக்கும் என்பது குறித்து ஸ்ரீலங்கா அரசாங்கமும அமெரிக்க அரசாங்கமுமே தீர்மானிக்கவேண்டும்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியென்றாலும் சரி, ஏனைய எநதப் பகுதியென்றாலும சரி எமது கடமைக்குரிய பகுதியைத் தீர்மானிப்பது கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தான என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-8)

---

## ச.ச.நிலையங்களுக்கு நூல்கள் விநியோகம்

2004ஆம் ஆண்டு பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதிமூலம் சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட 20 சன சமூக நிலையங்களிறகு நூல்கள் கொளவனவு செய்யப்பட்டு வழங்கப் பட்டுள்ளது. (க-47)

## நேர்முகப் பரீட்சை

(கொழும்பு)

கொட்டாஞ்சேனை, தர்கா நகர், றுகுணு தேசிய கல்விக் கல்லூரிகளில் 2005ஆம் கல்வியாண்டில் தமிழமொழி மூல மாணவாகளை அனுமதிப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 24, 29ஆம் திகதிகளிலும் பெப்ரவரி 3,4,5ஆம் திகதிகளிலும் நடைபெறும் என கொட்டாஞ்சேனை கல்விக் கல்லூரி பீடாதிபதி ஏ.ஏ.றகூல தெரிவித்தார்.

வெளிமாவட்டங்களைச் சேர்ந்தோருக்கு 24,29ஆம் திகதிகளில் மருதானை ஸாகிறாக் கல்லூரியிலும் ஏனையோருக்கு பெப்ரவரி 3,4,5ஆம் திகதிகளில் கொட்டாஞ்சேனை கல்விக் கல்லூரிகளிலும் இடம்பெறும். (க-9)

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் ஆலயப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (ற)

# கடல் குடித்த கண்ணீராறு

## சிறுகதை




ஒவ்வொருவரது வாழ்க்கையிலும் ஒவ்வொரு புத்தகங்கள் எழுதக்கூடிய சோகச் செய்திகளைச் சுமத்தியபடி சுனாமி அலைகள் ஓரளவு ஓய்ந்து கொண்டன. அலைகள் அடங்கினாலும்... இழப்புக்களையே இனிமேல் வாழ்க்கையாகக் கொள்ளப்போகின்ற ஒவ்வொரு மனிதனது சோகம் சுமக்கின்ற எண்ண அலைகளை கடவுளால கூட அடக்கமுடியுமா...?

மார்கழி மாதம் இருபத்தாறாம் திகதி.....

ஞாயிற்றுக்கிழமை.....

எட்டுமணி....

நந்தார்ப் பண்டிகையை முடித்துவிட்டு எல்லோரும் புது வருடத்திற்காகக் காத்திருந்தார்கள். அந்தநேரத்தில் தான் ..... கடலை தாய் என்று நம்பி அப்பிரதேசங்களில் வாழ்வியல் கோலங்களைப் பிணைத்திருந்த மக்களுக்கு... கடலன்னை அரக்கனாக மாறி.. அலைகள் குமுறி மதம்பிடிதது.. நம்பிக்கைத் துரோகமிழைத்து...

எல்லோரையும்...

எல்லாவற்றையும்... காவு கொண்டது.

தமிழீழத்தின் தலையென நிமிர்ந்து நின்ற யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் போன்ற மாவட்டங்களின் கரையோரக் கிராமங்களை முற்றாக நாசம் செயது ஏப்பமிட்டிருந்தது கடல கொந்தளிப்பு.

ஒரு சில நிமிடங்களில் மட்டும் நிகழ்ந்த இந்த இயற்கை அனர்த்தத்தை கலியுகம் முழுவதும் வாழ்கின்ற மக்கள் மறக்க மாட்டார்கள்.

கணவனையும் பிள்ளைகளையும் இழந்த மனைவி, பெற்றோரை இழந்த பிள்ளைகள், பிள்ளைகளை இழந்த பெற்றோர், ஒரு வயது முடியாத பிள்ளையின் சடலத்தை வடலியிலிருந்து பிடுங்கிய சோகம், காதலரைப் பிரிந்தவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், தொழிலுக்குப் போனவர்கள் திரும்பாமை எல்லோரையும் இழந்து தனிமரமானவர்கள், பாடசாலை ஆசிரியரும் மாணவர்களும், பங்குத்தந்தையும் பக்தர்களும, ஆஸ்தி கரைக்கச் சென்ற உறவுகள், சுற்றுலாவுக்கு வந்த வெளிநாட்டவர்கள் அப்பப்பா... யாரைத்தான் இந்தக் கடல் கோள் விட்டுவைத்தது.

மனித உயிரை மட்டுமல்ல... உடைகளையும் களைந்து நிர்வாணப்படுத்தியதில் சுனாமிக்கு அப்படி என்ன திருப்தியோ...?

* * *

ஏரோனிக்கு சுயநினைவு வர சில மணிநேரம் ஆகிவிட்டது. அவனுடைய ஆடைகளும் கிழிசல்படத் தவறவில்லை. அந்தோ பரிதாபம்...! கெண்டைக் கால்கள் வரை சிதைந்திருந்தன.

கால்களை மெதுவாக இழுத்து கண்களால் சுற்றுமுற்றும் துளாவுகிறான். மனைவியின் சீலை ஆலமர உச்சிக் கொப்பில் சிக்குப்பட்டுக்கிடக்கிறது.

பயங்கரக் கனவு கண்டவன் போல கலகலவென்று உரத்த குரலில் சிரிப்பு வந்தது. என்றாலும் எதனையும் கிரகிக்கும் திறன் அப்போது இல்லை.

''ஐயோ... ம்...ம்...அம்.. அம்மா...!,

அப்... அப்பா''

இரணையில் ஒற்றைப்பிள்ளை மதிலில் அடிபட்டு ரத்தம் பீறிட்டுப் பாய்கிறது.

''அப்பா... அம்மா... என்னைத் தூக்குங்கோ.. நான்... நான்.. அச்சாச் சட்டை கழட்டேல்லை... அடி... அடிக்காதேங்கோ....''

மதிலோடு அடிபட்டு மூளை வெளியே தள்ளிக்கிடக்கிறது. புத்தி கலங்கிவிட்டது. மூளையில் கடைசியாகப் பதிந்த செய்தியுடன் மூச்சு மெதுமெதுவாக அடங்கிவிட்டது.

என்ன கொடுமை...!

''பசிக்குது பசிக்குதென்று என்னைச் சுற்றிவரும் குழந்தை அல்லவா அவன். புட்டும் சுட்ட கருவாடும் மீதியை நினைக்க முன்னமே எல்லாம் நிகழ்ந்து விட்டது. தலை கிறுகிறுத்தது. ஏரோனி மயங்கிப் பொத்தென விழுந்துவிட்டான்.

* * *

மார்கழி இருப்பதாறு பிறந்த தினத்தை மறந்தாலும் பலர் இந்த நாளை மறக்கமாட்டார்கள். கடல் கொந்தளிப்பால் கடலோரக்கிராமங்கள் பல அள்ளுப்பட்டு... அடிபட்டு... உலகப்படமே மாறிய நாளல்லவா இது...!

ஏரோனி ஓட்டையாகிய வலைகளைப் பொத்திக்கொண்டிருந்தான்.

''நேற்று நத்தார். சனியோடை சனி எட்டு. வாற சனி வரிசம். புதுவரிசமும் பிறக்கப் போகுது;

அடைக்கலமாதாவே...''

அவனை அறியாமலே அவனது உதடுகள் பிதுங்கி மூடிக்கொண்டன.

''என்ரை ஒரே ஒரு பொம்புளைப் புள்ளையின்ரை சாமத்தியச் சடங்கை புதுவரிசத்தோட செய்துபோடலாம்'' அஞ்சு பெடியங்களுக்கும் ஒரு பெட்டை. அடுப்பும் நெருப்பும் மாதிரி மூண்டு பெடியங்களுக்குப் பிறகு நாலாங்கால் பெட்டை. அஞ்சு வரிசத்துக்குப் பிறகு இரணையள் இரண்டும் பெடியங்கள்.

''அப்பா ஏன் இண்டைக்குத் தொழிலுக்குப போகேல்லை..?''

''ஞாயிற்றுக்கிழமை அது தான்!''

''ஞாயிற்றுக்கிழமையெண்டா என்ன? அப்பாவுக்குக் கள்ளம்''

''பக்கத்து வீட்டு வேந்தர் மாமா போறார்தானே,

அங்க பாருங்கோ அவையள் போறது தெரியுது''

குழந்தை சுட்டிக்காட்டிய திசையை ஏரோனி பாக்கிறான்.

''... அது... அவையள் சைவக்காறர். நாங்கள் வேதக்காறர். அநேகமான வேதக்காறர் ஞாயிற்றுக்கிழமையளிலை கடலுக்கை இறங்குறதில்லை''

குழந்தையின் மனம் திருப்திபட்டதாகத் தெரியவில்லை.

''அச்சீக்குட்டியெல்லே... நேற்று நத்தாருக்குப் போட்ட புதுச்சட்டையைக் கழட்டிப் போட்டு வீட்டுச் சட்டையைப் போடுங்கோ....!

என்ன காற்சட்டைப பொக்கற்று பொம்மிக்கொண்டு கிடக்குது...''

''அது... ரொபி...''

''எங்காலை உந்தளவும்...?''

''ராத்திரி நந்தார்ப்பாப்பா தந்தவர். அண்ணையாக்கள் உவடமெல்லாம் வீடு வீடாய்த் திரிஞ்சு 'கரோல்' ஆடிப்போட்டு விடிஞ்சாப்பிறகும் நித்திரைகொள்ளுகினம்....

தண்ணி தெளிக்கட்டே அப்பா....''

''நித்திரைக் களைதானே கொள்ளட்டும்''

''எனக்குச் சரியாப் பசிக்குது''

''அம்மா புட்டவிக்கிறா.. அம்மாட்டைச் சொல்லி புகையிலை கிடக்கிற கருவாட்டிலை கொஞ்சம் எடுத்து சுட்டுத்தரச் சொல்லிச் சாப்பிடுங்கோ...''

அப்பா பின்னின குறையைப் பின்னிப்போட்டு வாறன். அதுக்கு முதல் அச்சாச்சட்டை கழட்டிப் போடவேனும்...!

* * *

எதற்குமே தலைவணங்கி பணிந்து போகாத கரையோர மக்களின் உறவுகளையும் உடைமைகளையும் பறித்து நிர்க்கதியாக நலன்புரி நிலையங்களில் முடக்கியிருந்த கடல் அரக்கன்.

எல்லா மக்களும் சுயமாக முன்வந்து முழு மனத்தோடு உதவி செய்தார்கள். பாடசாலைகளிலும், பிற இடங்களிலும் தங்கியிருந்த மக்களுக்கும் சமைத்த உணவு, மாற்றுடை, பாய், படுக்கை விரிப்பு எனத் தங்களது வசதிக்கேற்ப வழங்கினார்கள். பண உதவி உட்பட.

உடைமைகளுக்கு நிவாரணம் கொடுத்தாலும் உறவுகளைப் பறிகொடுத்தவர்களின் மனதிற்கு நிவாரணம் ஏது....?

மக்களின் மனதை ஆற்றச் சென்றவர்கள் தம் மனத்திலும் சோகம் அப்பியதுதான் மிச்சம். ஆற்றக்கூடிய சோகச் சுமைகளா இவை...?

''அழாதேங்கோ ஐயா... அழாதேங்கோ உங்கட... மனிசியும் பிள்ளையளும் உயிரோடை இருப்பினம்...??? பயப்பிடாதேங்கோ.. கொஞ்சமெண்டாலும் சாப்பிடுங்கோ...!''

''தம்பி என்னைக் கரைச்சல் படுத்தாதேங்கோ...! என்ரை மனிசியையும் பிள்ளைகளையும் காணாமல் நான் ஒரு சொட்டுத் தண்ணிகூடக் குடிக்கமாட்டன. எல்லாரும் இல்லாட்டி எனக்கொரு சாப்பாடே...?

விரும்பினா எனக்கொரு உதவி செய்யுங்கோ...''

''என்னெண்டாலும் சொல்லுங்கோ ஐயா அதுக்குத்தான் நாங்கள் இவ்வளவு பேரும் நிக்கிறம்''

''இரணையிலை ஒற்றை என கண்முன்னாலேயே போய்ச் சேந்திட்டுது...ம்..ம்...'' பெருமூச்சு அறுபடாமல் தொடர்கிறது.

''பிள்ளைக்குச் சரியான காய்ச்சல் அடிக்குது. எங்கையெண்டாலும் மருந்தெடுத்துக் கொடுங்கோ! புண்ணியம் கிடைக்கும்''

''தலையிலை தொப்பியைப் போடுங்கோ துவாயாலை போர்த்துவம்.

வாங்கோ அப்பன்...

மாமாக்களோடை வரப் பயமே...?''

''இல்லை''

''பிள்ளைக்கு என்ன வாங்கத்தாறது. சோடா குடியுங்கோவன்''

''எனக்கு என்ரை அம்மா தான் வேணும்''

அந்தப் பிஞ்சு விசும்பி விசும்பி அழத்தொடங்கிவிட்டது. ஆற்றும் பக்குவம் யாருக்கும் இல்லை. தடிமன் பிடித்ததால் குரலும் அடைத்திருந்தது.

* * *

''ஓடுங்கோ.. ஓடுங்கோ...! எல்லோரும் ஓடுங்கோ.. சுப்பசொனிக் வருகுது... சண்டை தொடங்கீட்டுது. ஆமிக்காறங்களும் ஓடி வாறாங்கள்.....

எல்லோரும் மறையுங்கோ...

ஏரோனி...., வேந்தா....

இரண்டு நாலாகி நாலு பத்தாகி பத்து நூறாகி அந்தக் கிராமம் எங்கும் செய்தி அசுர வேகத்தில் பரவியது.

பொத்திய வலைகளை அப்படியே வைத்துவிட்டு ஏரோனி நிமிர்ந்தான். மின்னி முழிக்க முன்னம் எல்லாமே நிகழ்ந்து விட்டது.

''என்ரை ஐயோ....''

''யேசுவே ஆண்டவரே...''

''காப்பாற்றுங்கோ...! காப்பாற்றுங்கோ...!''

''சண்டை தொடங்கேல்லை.. கடல் வருகுது''

ஏரோனி பனைமரம் ஒன்றைக் கட்டிப்பிடித்திருந்தான். அலையின் கோரவேகத்திற்கு

ந.வினோதரன்
ஒட்டுவெளி.

...ஈடுகொடுக்க முடியவில்லை.

...டைக்கலமாதா கோயில் சுக்குநூறாகக் கிடந்தது. ஏரோனயின் வீட்டைக் காணவில்லை. மீன் கூறி விக்கிற சந்தையும், நூலகக் கட்டடமும் பொரிப் பொரியாக... பல்குழலுக்குத் தப்பியிருந்த மரங்கள் முறிந்தும் சக்கையாகியும், பனைமரங்கள் சிராம்புகளாகவும் தலைவிரிகோலமாகவும் கட்டடங்கள எல்லாம் தரைமட்டமாகவும...

எங்கும் ஒரே மரண ஓலம்...!

அழுகையின் எதிரொலி...

பிணக்குவியலாய்; சுடுகாடாய்; சூனியப்பிரதேசமாய்...

செவிவழிக்கதைகளையும் புராணங்களையும் நம்பமறுத்த மனித சமுதாயம் இனி அவற்றை சொல்லுக்குச் சொல் பின்பற்றுவதை யாரும் தடுக்க முடியாது. தவிர்க்கவும் முடியாது. அவ்வளவு கொடூரமான இயற்கைச் சம்பவம் இது.

மயக்கம் தெளிந்தபோது....

''ஐயோ என்ரை மனிசியையும் பிள்ளையையும் கடல் அடிச்சுக்கொண்டு போட்டுது... வரியத்தோடை சாமததியச்சடங்கும் செய்துபோடலாமெண்டு...''

(..8. பக்கம் பார்க்கவும்)

# காலாகாலத்திற்கும் இந்தியாவுக்கு ஏற்படவிருந்த களங்கத்தை கடுமையாகப் போராடித் தடுத்தேன்

## இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து வைகோ செவ்வி.

(புதுடில்லி)

'இந்தியா - இலங்கை இராணுவப் பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்தாக இருந்த நிலையில் அதை நான் எதிர்த்துப் போராடியது உண்மை. அந்த ஒப்பந்தம் மட்டும் நிறைவேறியிருந்திருக்குமேயானால் இந்திய அரசாங்கத்திற்கு காலாகாலத்திற்கும களங்கும் ஏற்பட்டிருக்கும்'

இவ்வாறு ம.தி.மு.காவின் பொதுச் செயலாளர் வைகோ, ஜுனியர் விகடன இதழுக்கு வழங்கிய விஷேட செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் இந்தவிடயம் குறித்து மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வருடம் யூலை மாதத்தில் டெல்லி வந்திருந்த இலங்கைப பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஒப்பந்தம் பற்றிய பேச்சுவார்த்தை நடப்பதாகத் தகவல் வெளியிட்டதுமே, நான் பதறிப்போய் நமது பிரதமரைச சந்தித்தேன். ஈழத்தில் கடநத ஐம்பது ஆண்டுகளாகத் தமிழ் மக்கள் அனுபவித்து வரும் துயரங்கள் அனைத்தையும் அவரிடம் பட்டியல் போட்டேன்.

இராணுவ ஒப்பந்தம் போட்டால், இந்தியா மூலம் இலங்கை அரசு அடையும் அத்தனை பலத்தையும் தமிழர்களை ஒடுக்குவதற்கே சந்திரிகா பயன்படுத்துவார். ஈழத்தமிழர்கள் இரண்டாந்தரக் குடிமக்களாகவே தொடர்ந்து ஒடுக்கப்பட நாமே வழி ஏற்படுததிக்கொடுத்ததாக ஆகிவிடும் என்று பிரதமரிடம் எடுத்துக் கூறினேன்.

இப்போது அறிவிக்கப்பட்டுள்ள போர் நிறுத்தம் கூட விடுதலைப்புலிகள் அறிவித்ததுதான். ஆனையிறவுத் தாக்குதலில் தங்கள் பலத்தை நிரூபித்த நிலையில்தான், இந்தப் போர்நிறுத்தத்தைப் புலிகள் செய்தார்கள். உலக நாடுகள் அவர்களது முடிவை ஆதரித்தன. பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவும் முழு ஈடுபாட்டுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். ஆனால் அதைத் தாங்கிக்கொள்ள முடியாத ஜனாதிபதி சந்திரிகா, மூன்று அமைச்சர்களைப் பதவிநீக்கம் செய்ததோடு, நாடாளுமன்றத்தையும் கலைத்தார். அவரது நோக்கமே எப்போதும் தமிழர்களுக்கு எதிரானதுதான். இதை நான் பிரதமருக்கு விளக்கினேன்.

இவற்றை அமைதியாகக் கேட்டுக் கொண்ட பிரதமர் மன்மோகன்சிங் கண்டிப்பாக ஒப்பந்தம் போடமாட்டோம் என்றார். திருப்தியுடன திரும்பினேன். ஐந்து மாதம் கடந்தது. சந்திரிகா டெல்லி வந்திருந்தார். அப்போது மீண்டும் ஒப்பந்தப் பேச்சு ஆரம்பித்தது. உடனேயே வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங்கிடம் போனில கேட்டேன் 'ஒப்பந்தம் போடப்போவதாக உங்களுக்கு யார் சொன்னது? அப்படி எந்தத் திட்டமும் இல்லை' என்று அவர் கூறினார். நானும் அமைதியாகிவிட்டேன்.

ஆனால் இரு நாடுகளும் சேர்ந்து வெளியிட்ட கூட்டு அறிக்கையில், இராணுவ ஒப்பந்தம் வரப் போகிறது என்றும் கொழும்பு, பலாலி விமானநிலையத்தைப் பழுதுபார்க்கவும், இலங்கையின் கப்பல்களைப் பழுதுபார்க்கவும் இந்தியா உதவப போகிறது என்றும் குறிப்பிட்டிருந்தது.

இதைப் பார்த்ததும், அவ்வளவு தான்! சந்தடியில்லாமல் எல்லாவற்றையும் பேசி முடித்துவிட்டார்கள் போலிருக்கிறது என்று நொந்து போனேன். ஆனால் எந்த நிலையிலும் இதைத் தடுக்கவேண்டும் என்று உறுதிகொணடேன். மறுபடியும் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்தேன். முப்பத்தைந்து நிமிடங்கள் என் பேச்சைக் குறுக்கிடாமல் கேட்டார். பிரதமர் நாம் ஒப்பந்தம் போடாவிட்டால் சீனாவோ, பாகிஸ்தானோ இலங்கையுடன் ஒப்பந்தம் போட்டு அவர்களுடன் நெருங்குவார்களே.. அது நமக்கு நல்லதா? என்று கேட்டார் பிரதமர். எங்கள் கருத்து நியாயமானது. அதற்காக, நாமே இலங்கைக்கு ஆயுதங்களை எடுத்துக் கொடுத்தால், அங்குள்ள தமிழர்கள ஒருநாளும் நம்மை மன்னிக்கமாட்டார்கள் என்றேன். சோனியாவைச் சந்திக்கச் சொன்னார் பிரதமர். அவரிடம் பேசும்போது, எனக்கு மிகப் பெரியதொரு தயக்கம் இருந்தது. அவர் இந்தப் பிரச்சினையையும், எனது வாதத்தையும் எப்படி எடுத்துக்கொள்வாரோ என்ற தயக்கம் இருந்தது. ஆனாலும் யோசித்துச் சென்ற அனைத்தையும சொன்னேன. சில விஷயங்களைச் சொல்லும்போது, 'அப்படியா! இதெல்லாம் எனக்குத் தெரியாதே' என்றார். மனிதாபிமானமும் இரக்க சிந்தனையும்கொண்ட நங்கள் இந்த ஒப்பந்தத்தைத் தடுக்கவேண்டும் என்று வேண்டுகோள் வைத்துவிட்டு வந்தேன்.

அதன்பிறகு, இராணுவ அமைச்சர் பிரணாப் முகர்ஜி, முன்னாள் இராணுவ அமைச்சர் சரத்பவார், கம்யூனிஸ்ட் தலைவர்கள் சுர்ஜித் மற்றும் பரதன ஆகியோருக்கும் எனது கருத்துக்களைச் சொன்னேன். நீண்ட போராட்டத்துக்குப் பின் ஒப்பந்தத்துக்கு முற்றுப்புள்ளி விழுந்திருப்பதாகவே தெரிகிறது.

ஆனால் அப்படியொன்றும் அதிகாரப்பூர்வமாக அறிவிப்பு வரவில்லை. சில நாட்களுக்குமுன் பிரதமர் என்னை அழைத்துத் தீவிர ஆலோசனைக்குபிறகு அந்தத் திட்டத்தைத் தவிர்த்திருக்கிறோம் என்றார். இதைவிட வேறென்ன வேண்டும்?

இராணுவ ஒப்பந்தம் இலங்கையில் மட்டுமல்ல... நமது நாட்டுக்குள்ளும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையே மறுபடி எப்போது வேண்டுமானாலும் போர் மூளலாம். அப்போது, இந்திய இராணுவததால் வந்த உதவிகளை, யுத்த தர்மத்தையெல்லாம் மீறி அப்பாவி மக்கள் மீது இலங்கை செலுத்தாது என்பது நிச்சயமில்லை. அப்படி நடந்தால், ஒரு பக்கச்சார்புடன இந்தியா செயல்பட்டதாகக் குற்றச்சாட்டு வரும் இந்த விரோத மனப்பானமை, தமிழ் நாட்டிலுள்ள தமிழ் இளைஞர்கள் மத்தியிலும் ஒருவித விரக்தியையும் கோபத்தையும் ஏற்படுத்தும்.

தனிநாடு கேட்டு, பின்னர் அந்தக் கருத்தைக் கைவிட்டவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். ஆனால் இப்போதும் அதுபோன்ற ஒரு எண்ணத்தை இங்குள்ள இளைஞர்கள் மனதில் விதைப்பதற்கான சக்திகள் இருக்கத்தான் செய்கின்றன. அவர்கள் இதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி, நமது அரசின்மீது இந்த இளைஞர்களுக்கு விரோத மனப்பான்மையை வளர்த்துவிடுவார்கள். அது நமது நாட்டின் இறையாண்மைக்குக் கேடான விடயமாக மாறக்கூடும என்று குறிப்பிட்டார்.

இதையெல்லாம் தெரிந்துகொண்டு தான், இனி இந்தியாவை நம்பிப் பயனில்லை என்ற நிலையில் சுனாமி பாதிப்பு நிவாரணப் பணிகளுக்கு அமெரிக்காவைத் தனது மண்ணுக்குள் இலங்கை இறககியிருக்கிறதா? என அவரிடம் வினவப்பட்டதற்கு,

அது எனக்குத் தெரியாது. ஆனால் மிக நீண்டகாலமாகவே இலங்கைத்தீவு மீது அமெரிக்காவுக்கு ஒரு கண் உண்டு. மீட்புப்பணி என்ற போர்வையில் நுழைந்து, அங்கேயே நிரந்தரமாகத் தங்க அமெரிக்கா முயற்சிக்கலாம். இதை இந்தியா உணர்ந்து, கவனத்துடன் தனது கொள்கையை வகுத்துக்கொள்ள வேண்டும். அந்த எச்சரிக்கை நமது அரசுக்கு உண்டு என்றார்.

மற்றும் இந்த ஒப்பந்தத்துக்கு எதிராக ஒவ்வொரு தலைவரையும் நீங்கள் சந்தித்துப் பேசும்போது ஈழப் பிரச்சினையில் இன்னும் நீங்கள் அதே நிலைப்பாட்டுடன் இருப்பது பற்றி அந்தத் தலைவர்கள் எப்படி எடுத்துக்கொள்கிறார்கள்? என்ற வினாவுக்கு வைகோ பதிலளிக்கையில்,




யாரும் தவறாக எடுத்துக் கொள்வார்கள் என்று தோன்றவில்லை. இலங்கைத் தமிழர்களின் நலனுககாக வாதாடுவதை ஒரு சங்கடமான வடயமாக நான் ஒருபோதும் நினைததில்லை. விடுதலைக்காக ஆயுதம ஏந்தாமல் போயிருந்தால், ஈழத் தமிழினம் நிரந்தர அடிமைகளாகவே இந்நேரம் ஆகியிருக்கும். அனைத்துலக நாடுகள் இன்று அவர்களை அங்கீகரிக்கக் காரணமே, அவர்களின் போராடும் சக்தியும் அவர்களது கோரிக்கையில் உள்ள நியாயமும்தான். அதற்கு மனச்சாட்சிப்படி குரல்கொடுக்கிறேன். டெல்லியில் நான் சந்தித்த தலைவர்களும் இதை உணர்ந்துள்ளார்கள்.

சுனாமி அழிவுகளைப் பார்வையிட ஐநாசபைச் செயலாளர் கோபி அனான இலங்கை சென்றபோது அவரை ஈழத் தமிழ்ப்பகுதிகளுக்குப் போய் விடாமல் சாமர்த்தியமாகத் தடுப்பு வேலையில் இறஙகினார் ஜனாதிபதி சந்திரிகா. இந்தச் சோகத்தினாலும், பிரபாகரன் இறந்துவிட்டார் என்று அங்குள்ள அரச வானொலி வதந்தி பரப்பி திருப்தி அடைகிறது. அப்படிப் பட்டவர்களுக்கு நமது நாட்டின் இராணுவ பலம் கைகொடுக்காமல் இருக்க வேண்டும் என்று வாதாடுவதில் எனக்கென்ன சங்கடம் இருக்க முடியும். இந்த ஒப்பந்தம் நிறைவேறாமல போவதில் முக்கிய பங்கு எனக்குத் தான் என்றால், அதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன என்றார். (ற)









# தேடுதல்

(கொழும்பு)

கடந்த வருடம் சிங்கப்பூரில் வைத்து போதைப்பொருட்களுடன் கைதுசெய்யப்பட்ட இலங்கைக் கலைஞரான ஜெரிமி மஹேறன சன்முகத்திற்கு பிணை வழங்கப்பட்ட போதிலும் திங்கட்கிழமை இரண்டாம் தடவையும் அவர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லையென நீதிமன்ற அதிகாரிகள் தெரிவித்தனர்.

13 பேர்களுடன் சேர்த்து சுற்றி வளைக்கப்பட்ட சண்முகம் கடந்த வருடம் டிசம்பர் மாதமும் நீதிமன்றத தில் ஆஜராகத் தவறிவிட்டார்.

இதனால் தற்போது அவரை அந்நாட்டுப் பொலிஸார் தேடிவருகினறனர். (க-9)

* * *

# பயிற்சிப் பாசறை

(கொழும்புத்துறை)

திருமறைக்கலாமன்ற நாடகப் பயிலக மாணவர்களுக்கான நான்கு நாள் பயிற்சிப் பாசறை திருமறைக் கலாமன்ற சணலத்தூது மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து, 22,23,24,ஆம் திகதிகளில் தினமும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை பல்துறைசார் வள ஆளணியினரால் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதுடன் பங்குபற்றியவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

வருடாவருடம் மேற்படி பயிற்சி உயர்தர மாணவர்களுக்கும், கலை ஆர்வலர்களுக்கும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (ற-51)

* * *

# அனுபவப் பகிர்வு

(யாழ்ப்பாணம்)

தமிழ் எழுத்தாளா ஒன்றியத்தின் 'மனவெளி' கலை இலக்கிய அனுபவப் பகிர்வில் எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு ஒன்றிய மண்டபத்தில் செம்பியன் செல்வன் கருத்துரை வழங்கவுள்ளார். (ற)

* * *

# ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்துசமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் பிரதி வெள்ளிக்கிழமைகளில் நாவலர் மணி மண்டபத்தில் நடாத்திவரும் தொடர் ஆன்மீகச் சொற்பொழிவில் இன்று மாலை 6.30மணிக்கு 'ஆறுமுகம் ஆன பொருள்' எனும் விடயம் பற்றி இளைப்பாறிய கல்வி அதிகாரி கோ.சி.வேலாயுதம் சிறப்புச சொற்பொழிவாற்றவுள்ளார். (ற-5)

* * *

# வரைபடம் வரையும் பணி ஆரம்பம்!

(கொழும்பு)

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் வரைபடங்களை வரையும் பணியை இதுவரை பிரித்தானிய தொண்டர் நிறுவனமான 'மெப் எக்ஷன்' மேற்கொண்டிருந்தது.

எனினும் தற்போது இப்பணி நிலஅளவைத் திணைக்களத்திடம ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை புனர்நிர்மாணம் செய்வற்காகத் தகவல் தொழில்நுட்பததை பயன்படுத்துவது தொடர்பாக கொழும்பு நிலஅளவைத் திணைக்களத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்விசேட கலந்துரையாடலை விவசாய காணி அமைச்சும் மெப் எக்ஷன் அமைப்பும் ஏற்பாடு செய்திருந்தன. (க)

# கடல்.....

(...7. பக்கத் தொடர்ச்சி)

பூகம்பம் வெடிப்பது போல அழத் தொடங்கிவிட்டான். ஒரு ஆண் அழுவதை யாரால்தான் கண்கொண்டு பார்க்கமுடியும்...?

"ஐயா, அழாதேங்கோ.. நீங்களே இப்படி அழுதால் மற்றப்பிள்ளையளை எப்படித் தேற்றுறது. நீங்கள்தான் கொஞ்சமெண்டாலும் தைரியமாயிருக்க வேணும்"

* * *

பிரேதங்கள் தொகை தொகையாகக் கரையொதுங்கிக்கொண்டிருந்தன. இடிபாடுகளுக்கை உள்ளதுகளையும் மீட்டு புகைப்படம் எடுத்துவிட்டு தரிசு நிலங்களில் புதைத்துக் கொண்டிருந்தார்கள்.

ஏரோனியின் மனைவியின் சடலமும் இருப்பதாகச் செய்தி வந்தது.

அவளோடு வாழ்ந்த இருபத்தைந்து வருட நினைவுகளும் பளிச்சிட்டு நெருட... ஆறாத துயரத்துடன் ஒருபிடி மண் போட்டு அடக்கம் செய்துவிட்டான். தன்னை வயது வந்த காலத்தில் பார்க்குமென்ற கனவுகளைச் சுமத்திய பொம்புளைப் பிள்ளையின்ரை சடலம்கூடக் கிடைக்கவில்லை.

"நான் எனிமேல் அழன்; நானென்ன தனிமரமே...? ரண்டு கால்களும்தானே சிதைத்திருக்குது. நேற்று அவளுக்கு மண்போடேக்கை நானும் செத்திருக்கலாம் எண்டுதான் நினைச்சன். பிள்ளைகளையெண்டாலும் அடைக்கலமாதா விட்டிருக்கிறா...

பொத்துக்கொண்டு வந்த அழுகையையும் அடக்கி சொண்டைக் கடித்துக்கொண்டு கூறினான்.

விடிந்தது!

அங்கிருந்த அனைவரும் எழுந்துவிட்டார்கள்.

ஏரோனி விழிக்கவேயில்லை.

அவன் இனிமேல் விழிக்கப் போவதுமில்லை.

*"நான் எனிமேல் அழன்; நானென்ன தனிமரமே..."* எண்டது மட்டும் பலரது உள்ளங்களில் ஆழமாக எதிரொலித்துக் கொண்டிருந்தது.

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

தொடர் இல 36

### அறிவில்லாத மாணவன்



நான் வடலூரில் திருப்பணி செய்து கொண்டிருந்தேன். அப்பொழுது இரும்பு எளிதாகக் கிடைக்காத காலம். ஈரோடில் இரும்புக்கடை திரு. வி.அர்த்தநாரி முதலியார் என்பவர் திருப்பணிக்கு இனாமாக இரும்புச் சாமான்களைக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

வடலூரிலிருந்து இரும்புக் கம்பி வாங்கும் பொருட்டு ஈரோடுக்குப் போய்க் கொண்டிருந்தேன். காலை 8மணியளவில் அந்த ரயில் சேலம் டவுனுக்குச் சென்றது. சூலமங்கலம் போய் ரயில் மாறி ஈரோடுக்குப் போக வேண்டும். நான் ரயிலில் குறிக்கும் அறைக்குள் சென்று கைகால்களை அலம்பிக்கொண்டு, திருநீற்றுப்பை எடுத்து நெற்றி நிறைய திருநீற்றைப் பூசிக்கொண்டேன்.

அநத ரயிலில் ஏறிப் பிரயாணம் செய்கின்ற ஒரு மாணவர் என்னைப் பார்த்துச் சிரித்தார்.

நான் மனதிற்குள் சடக்கரமந்திரம் ஜெபித்துக்கொண்டிருந்தேன். அந்த மாணவர்கள் இதைப் பார்த்து "ஐயா! ஏன் நெற்றிக்கு வெள்ளையடித்துக் கொள்கிறீர்?" என்று கேட்டுச் சிரித்தார்.

அவருக்கு வேதத்திலிருந்தோ, தேவாரம், திருவாசகம், திருமநதிரத்திலிருந்தோ பாடல்களைக் கூறி நியாயம் சொன்னால் அவர் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

உடனே நான் "தம்பி! குடியிருக்கின்ற வீட்டிற்கு வெள்ளையடிப்பார்கள். காலியான வீட்டிற்கு வெள்ளையடிக்க மாட்டார்கள். நெற்றியில் பகுத்தறிவு குடியிருக்கின்றது. என்று நான் வெள்ளையடித்துக்கொண்டேன்" என்று உரைத்தேன்.

அவருக்கு அந்தப் பதில் ஆணி அறைந்தது போல் இருந்தது. "தன் நெற்றியில் அறிவு குடியிருக்கவில்லை. காலி வீடு, அதனால் வெள்ளையடிக்காமல் இருக்கின்றோம்." என்பது அவருக்குப் புலனாயிற்று. அவர் பேயறைந்தாற்போல் வாயடைத்துச் சும்மா இருந்தார்.

ரயிலை விட்டு இறங்கும் பொழுது "சுவாமி! சிறிது திருநீறு கொடுங்கள்" என்று கேட்டு வாங்கி திருநீறு பூசிக்கொண்டார். திருந்தினார். திருநீற்றுடன் பொருந்தினார்.

### முருகன் கருணை

வள்ளிமலையில் படிகள் அமைத்துத் திருப்பணி செய்தேன். வள்ளிமலை வள்ளிநாயகியார் அவதரித்த திருத்தலம், முருகப் பெருமானுடைய ஞான மேயாகிய திருவடி பல காலும் தோய்ந்த ஞானஸ்தலம் வள்ளிமலை.

இத்தலத்தில் அடிவாரத்திலுள்ள ஆறுமுகப் பெருமானுடைய கோவிலுக்கு இராஜகோபுரம் கட்டும் பொருட்டு கால்கோள் விழா நடத்த ஏற்பாடு செய்திருந்தேன். இந்த விழாவிற்குக் குடியாத்தம் திருமகள் மில் அதிபர் க.அ.ஷண்முக முதலியார், திருவண்ணாமலை பஸ் அதிபர் தேவராஜ முதலியார் முதலிய பெரியோர்களை வருமாறு ஏற்பாடு செய்திருந்தேன்.

கால்கோள் விழாவிற்கு முன்தினம் சிதம்பரத்தில் விரிவுரை இருந்தது. சிதம்பரத்தில் நடந்த அந்த விரிவுரைக்கு கடலூர் வருமான வரி ஆபீசர் எனது ஆப்த நண்பர் திரு ஏ.கே. சுப்பிரமணியப்பிள்ளை அவர்கள் வந்திருந்தார். விரிவுரை முடிந்தவுடன் அவர் என்னைப் பார்த்து "என் காரில் வந்து கடலூரில் ரயில் ஏறுங்கள்" என்று சொன்னார். அதுபடி அவருடைய காரில் கடலூருக்குச் சென்றேன். அப்பொழுது காற்றும், மழையும், புயலும் வீசிக் கொண்டிருந்தன. அவரை வீட்டிற்குப் போகச் சொல்லிவிட்டு கடலூர் புகைவண்டி நிலையத்தில் தங்கியிருந்தேன். இராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ் இரவில் இரண்டு மணி நேரம் தாமதமாக வந்தது. விழுப்புரத்தில் காட்பாடி ரயில் கிடைக்காதே என்று வருந்திக்கொண்டிருந்தேன். அந்த வண்டியிலேறி விடியற்காலை 5.30க்கு விழுப்புரம் சேர்ந்தேன். காட்பாடி வண்டி குறித்த நேரத்தில் புறப்பட்டுப் போய்விட்டது.

காலை 9.00மணிக்கு வள்ளிமலையில் கால்கோள்விழா. தந்தி கொடுப்பதற்கும் வழியில்லை. காட்பாடி ரயில் கிடைக்காமையினால் நான் தீயில்விழுந்த புழுவைப் போல் துடித்துவிட்டேன்.

அடுத்து விடியற்காலை 5.30மணிக்கு திருச்சிக்குப் போகும் ரயிலில் முதல் வகுப்பில் ஏறினேன்.

"வள்ளிநாயகி! உன்னுடைய திருப்பணிக்குப் போகும் எனக்கு இத்தகைய இடர்பாடு நேர்ந்ததே! உனக்கு இந்த ஏழை மீது இரக்கமில்லையா? என்னை இந்த வேதனைக்கு ஆளாக்கினையே! அம்மா! கால்கோள் விழா என்ன ஆகுமோ! அத்திருப்பணிக்கு நான் தலைவன் என்னை நம்பிப் பலரும் வந்திருப்பார்களே நான் போகவில்லையானால் அவர்கள் என்ன நினைப்பார்களோ? தகவல்கொடுக்கவும் வழியில்லையே!" என்று புலம்பிக் கொண்டே வண்டியில் பிரயாணம் செய்தேன். திருச்சிக்கு பகல் 12.00மணிக்கு அந்த வண்டி சேர்ந்தது.

திருச்சிராப்பள்ளியில் முதல் வகுப்புப் பிரயாணிகள் தங்கும் அறையில் நீராடி வழிபாடு செய்தேன். பகல் 2.00மணி உணவுச்சாலைக்குப் போனேன். உணவுச்சாலை பூட்டியிருந்தது. நான் வழிபாடு செய்வதற்கு முன் தண்ணீரும் பருகுவதில்லை. வெறும் காபி பருகலாம் என்றால் அதற்கும் வழியில்லை. விசனத்தோடு திரும்பினேன். அங்கே ஒரு ஐயர் வந்தார். "என்ன பார்க்கிறீர்?" என்றார். "ஒன்றுமில்லை. காபி குடிக்கலாமென்று வந்தேன் பூட்டியிருக்கிறது புறப்படுகிறேன் என்று சொன்னேன்.

"உள்ளே வாருங்கள்" என்று கூறி உணவுச்சாலைக்குள் அழைத்துக்கொண்டு போய் பகல் 2 1/2மணிக்கு இலை போட்டு நெய்யிலே பொரித்த உணவுகளுடன் உணவு படைத்தார். உண்டு உவந்தேன். பணம் கொடுக்கப்போனேன். வேண்டாம் என்று மறுத்து விட்டார். "நீங்கள் யார்?" என்று கேட்டேன்.

"நான்தான் இந்த உணவுச்சாலைக்கு அதிகாரி" என்றார்.

"உங்கள் பெயர் என்ன?" என்று கேட்டேன்.

"சுப்பிரமண்ய ஐயர்" என்று சொன்னார். முருகன் பெயருள்ளவர் நமக்கு உணவு தந்தாரே எனறு எண்ணி மாலை 3.30க்கு ரயில் ஏறி இரவு 10.00மணிக்கு மதுரை சேர்ந்தேன். அப்பொழுது,

நான் மதுரையில் வசித்துக்கொண்டிருந்தேன். வீடு முழுவதும் தெப்பக்குளம்போல் நீர் நிறைத்திருந்தது. சாய்வு நாற்காலியில் படுத்து உறங்கினேன்.

பொழுது புலர்ந்தது, காலை 7.15வானொலிச் செய்தியில் அரியலூரில் ரயில் விழுந்து பலர் மாண்டுவிட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டது. அதைக் கேட்டு நான் அதிர்ச்சி அடைந்தேன்.

என்னுடைய திட்டத்தின்படி விழுப்புரத்தில் ரயில் கிடைத்து வள்ளி மலைக்குப் போயிருப்பேனானால் திரும்பிவரும் பொழுது அந்த ரயிலில் வந்து அரியலூரில் நானும் விபத்துக்கு ஆளாகியிருப்பேன். கருணையே வடிவாகிய கந்தப் பெருமான் இன்னும் சில திருப்பணிகளை என்னைக்கொண்டு செய்விக்கும் பொருட்டு இந்த மாறுதலைச் செய்தார்.

விழுப்புரத்தில் ரயில் கிடைக்காத பொழுது தெய்வத்தை நொந்து கொண்டேன். இறைவனுடைய திருவருட் செயலை யாவரே அறிவர்!

(தொடரும்)



கொரிய நாட்டு இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஜொங் ஆடோ குழுவினர் வடமராட்சியிலுள்ள சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு உதவிவரும் செயலணியில் கலந்துரையாடும்போது எடுக்கப்பட்ட படம். யாழ்.தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் ந.யோகராஜனும் செயலணிக்குழுவினரும் அருகே உள்ளனர்.



கொரிய நாட்டு இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஜொங் ஆடோ குழுவினருக்கு சுனாமி பாதிப்புக்கள் பற்றி தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட ஊடகத்துறை இணைப்பாளர் இமயவன் விளக்குகிறார்.

படங்கள்:- எஸ்.இராமச்சந்திரன்

## கலைஞானி செல்வரத்தினத்தின் பணிகள்

## காலத்தால் மறக்கப்பட முடியாதவை

இரங்கல் உரையில் சட்டத்தரணி பொன்.பூலோகசிங்கம்

(யாழ்ப்பாணம)

மாமனிதா் கலைஞானி அ.செல்வரத்தினத்தின் மூன்றாவது சிரார்த்த தின அஞ்சலி நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை கரவெட்டி ஞானவில்லாவில் எம். ஷாந்தன சத்தியகீர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சட்டத்தரணி பொன்.பூலோகசிங்கம் இரங்கல் உரைநிகழ்த்துகையில்,

குரும்பசிட்டி மண்ணிலே தோன்றி எம் இனத்தின் கலங்கரைவிளக்காக நின்றவர் கலைஞானி. தமிழ் இனத்தின் வரலாற்றை ஆவணமாக்கும் முயற்சியில் செயற்பட்ட அவருக்கு, வாழும் போதே மாமனிதர் என்ற உயர்விருது கிடைத்திருந்தது. சமூகப்பணியாற்றுபவா்களுக்கான கௌரவம் கலைஞர்கள் உயிருடன் வாழும போதே கொடுக்கப்படவேண்டும். இக் கௌரவம் துறைசார்ந்த பணிகளுக்காக வழங்கப்பட வேண்டும். அவ்வாறான கௌரவத்தைத் தொல்பொருள் சேகரிப்பும் பாதுகாப்பும் என்ற துறைக்காகப் பெற்றுக்கொண்டவரே கலைஞானி செல்வரத்தினம.

கலைஞானி, மூதறிஞர் சொக்கன், புத்தொளி சிவபாதம், மற்றும் தில்லைச்சிவன் போன்ற அரிய சொத்துக்களை அண்மையில் இழந்து நிறகின்றோம். தமிழ்த்தேசியத்தின் வளர்ச்சிக்காக ஆரம்பகாலம் முதல் செயற்பட்டுவந்தவர் கலாநிதி சொக்கன். இலக்கியம், சமூகம், கலை, கலாசார வளர்ச்சிக்காக வழங்கப்படுகின்ற கௌரவங்கள் சமூக அந்தஸ்து உடையவையாக இருத்தல் வேண்டும்.

கலைஞானி செய்த பணிகள் காலத்தால் மறக்கப்படக கூடியன அல்ல. அவரின் தொண்டு வரலாற்றில் பொறிக்கப்படும் என்றார். (ற)

## நிவாரண உடைகளைத் திருடிய சப் இன்ஸ்பெக்டரைத் தேடி வலைவீச்சு

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய துணிவகைகளை திருடியதாகக் குற்றம் சுமத்தபபட்டுள்ள பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் பொலிஸாரால் தேடப்பட்டு வருகின்றார்.

கொட்டாவை பொலிஸ் காவல் நிலையத்தில் பணியாறறும் இவர் வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனமொன்றினால் கொள்வனவு செய்யப்பட்டுக் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த ஆடை வகைகளைத் திருடியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தறபோது தலைமறைவாகியிருக்கும் இவர் தேடப்பட்டு வருகின்றார்.

இதேவேளை, கட்டட இடிபாடுகளிலிருந்து அகற்றப்பட்ட உலோகப் பொருட்களைக் கொள்வனவு செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் வெளிமாவட்டத்தைச் சேர்ந்த 9 பேர லொறியொன்றுடன் கல்முனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில 29ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள். பழைய பொருட்களை வாங்கும் இந்த வியாபாரிகள் உளளூர் வியாபாரிகளிடம் இவற்றைப் பெற்றுள்ளார்கள். கட்டட உரிமையாளர்களின் அனுமதியின்றி இந்தப் பொருட்களை விற்பனை செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு நீதிபதி பொலிஸாரைப் பணித்துள்ளார். (ப)

# 'சுனாமி' குறித்த தீர்க்கதரிசனம்

சென்னை கடல் நீரால் தாக்கப்படும் என்று 500 ஆண்டுகளுக்கு முன்பே பிரான்ஸ் நாட்டு தீர்க்கதரிசி நாஸ்டர் டார்ம்ஸ் கூறியிருக்கிறார் என்கிறார் ஆராய்ச்சியாளர் பெரிஜோ.

இவர் தமிழக அரசின் தொழில் கூட்டுறவுத் துறையில் உதவி



இயக்குனராக இருந்து ஓய்வு பெற்றவர். ஜோதிடத்திலும், குறிப்பாக தீர்க்கதரிசி நாஸ்டர் டார்ம்ஸின் மீதும் ஆழ்ந்த பற்றுடையவர். இவர் நாஸ்டர் டார்ம்ஸ் பற்றி ஆராய்ச்சி செய்து பல நூல்களை வெளியிட்டிருக்கிறார். ஈரோடு பெரியார் நகரில் வசித்து வருகிறார்.

அவர் சொன்ன தகவல்கள்... வருமாறு

ஜோதிட ரீதியாக இந்திய நாடு கன்னி ராசியில் அமைந்திருப்பதாகப் பலரும் சொல்கிறார்கள். உண்மையில் நமது நாடு மகர ராசியில்தான் அமைந்திருக்கிறது. சுக்ரனும் புதனும் மகம்-கேட்டை நட்சத்திரத்திற்கு வரும்போது நிலநடுக்கம் ஏற்படும்.

அப்போது அங்கே செவ்வாய் இருப்பதால் பூமிக்கு அதிபதியான அவரும் சேர்ந்து தண்ணீர் அமைந்த பகுதிக்குள் நில நடுக்கம் ஏற்படும் என்பது தீர்க்கதரிசி நாஸ்டர் டார்ம்ஸின் கணிப்பு. அவருடைய குறிப்புகளில் சேதம் இரு வழிகளில் வரலாம் என்று சொல்லப்பட்டுள்ளது.

வரக்கூடிய பேரழிவு நீராலும் இருக்கலாம் செவ்வாய்க் கிரகம் சேர்ந்திருப்பதால் நெருப்பாலும் இருக்கலாம். என்று கூறியுள்ளார் அவர்.

இதை என்னுடைய ஜோதிட ஆராய்ச்சியும் உறுதிப்படுத்துகிறது. கடந்த 2001ஆம் ஆண்டே நான் இந்த அழிவு பற்றி எச்சரிக்கை செய்துள்ளேன். அந்தச் செய்தி தமிழன் எக்ஸ்பிரஸில் வெளியாகி உள்ளது. சனி மகரத்தைப் பாதிப்பதால் கடற் கரை ஓர நகரங்களெல்லாம் பாதிப்புக்கு ஆளாகும். சனிதன் சொந்த ராசியைப் பார்ப்பதால் தான் மிகப் பெரும் சேதங்கள் பல தவிர்க்கப்பட்டுள்ளன.

இதுவே வேறு ராசியை பார்த்திருந்தால் இன்னும் பயங்கரமான அழிவு ஏற்பட்டிருக்கும். இந்தக் கிரகங்கள் இதே சேர்க்கை பெற்ற காலங்களான 28.7.76ல் சீனாவிலும், 29.2.60 பிரான்ஸிலும் பேரழிவு ஏற்பட்டது கவனிக்கத் தக்கது.


மகர ராசியில் சென்னை அடங்கும். இந்த அழிவு பற்றி 'மழைக்குறில்' நூல் என்ற மிகப் பழைய புத்தகமும் முன்கூட்டியே எச்சரித்துள்ளது. சென்னையில் ஏற்பட்ட கொந்தளிப்பு குறித்து பாகம் 9 - செய்யுள் 82ல் நாஸ்டர் டார்ம்ஸ் குறிப்பிட்டிருக்கிறார். அவரது பாடல்களை யாரும் அவ்வளவு எளிதாக ஆய்வு செய்து விட முடியாது.

சரித்திரம்-ஜோதிடம் இரண்டோடு ஆங்கில அறிவும் இருந்தால் தான் ஆராய்ச்சி செய்து துல்லியமாகப் பொருள் கண்டு பிடிக்க முடியும். 83 ஆவது பாடலில் ஏதேனும் ஒரு கருத்தைச் சொல்லி விட்டு அதன் தொடர்ச்சியை 210ல் கூறியிருப்பார்.

இவைகளைப் பொறுமையோடு ஒன்றிணைத்துப் பார்த்தால் ஏராளமான வருங்கால ரகசியங்கள் புலப்படும். 82 ஆவது செய்யுளில் புதிய நூற்றாண்டின் துவக்கத்தில் கடலை ஒட்டிய நகரம் அழிவைச் சந்திக்கும். தண்ணீர் மூலம் பல்வேறு நோய் பரவும். அதிலிருந்து மனித குலம் மீள நீண்ட நாட்களாகும் எனக் கூறியுள்ளார் அந்தத் தீர்க்கதரிசி பெரிஜோ.

இயற்கைச் சீற்றத்தால் இலங்கையிலும் பாதிப்பு இருக்கும் அதனால் அரசு- புலிகள் இரு தரப்பினருக்கு இடையே நடக்கவிருந்த போர் தவிர்க்கப்படும். எனவும் போர் தொடர்பான 4ஆம் பாகத்தில் 28 செய்யுளில் கணித்திருக்கிறார் நாஸ்டர் டார்ம்ஸ். இப்போது இக்கருத்து பொருந்துவதாகவே தெரிகிறது.

ஏனென்றால் இந்த நிலநடுக்கத்தில் இலங்கையும் கடுமையாக



பாதிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசுக்கும் விடுதலை புலிகளுக்குமிடையே அமைதி ஒப்பந்தம் ஏற்படுவதில் திடீர் சிக்கல்கள் ஏற்பட்டன. மீண்டும் போர் நடத்தப் போவதாக புலிகள் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

இந்தப் பேரழிவுக்குப் பின் நிலைமை மாறலாம். இதேபோல தமிழகத்தில் மற்றொரு பாதிப்பும் ஏற்பட இருப்பதாக 62 ஆவது செய்யுளில் உள்ள முதலாவது பாடலில் காணப்படுகிறது. 'தமிழகத்தில் வெள்ளம் அலலது தீயினால் கல்வி நிலையங்கள் பாதிக்கப்படும்'.

இதனால் தகுதி வாய்ந்த பல ஆசிரியர்கள் அழிவார்கள். அதன் பின்பு நல்ல தரமான கல்வியைக் கற்றுத்தர போதிய ஆசிரியர்கள் இருக்க மாட்டார்கள் என்றும் கூறியுள்ளார் தீர்க்கதரிசி. அரசியலைப் பற்றி ஏராளமாய் சொல்லி இருக்கிறார் நாஸ்டர் டார்ம்ஸ்.

அவைகளை சொல்லப்போனால் பலரது எதிர்ப்புகளைச் சம்பாதிக்க வேண்டியது வரும் என்று கூறி முடித்துக் கொண்டார் ஆராய்ச்சியாளர் பெரிஜோ. கேட்பதற்கு பிரமிப்பாகத்தான் இருக்கிறது. (ற)

## துப்புரவுப் பணிகள்

(சாவகச்சேரி)

சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மணற்காட்டுப் பிரதேசத்தில் கடந்த 17 ஆம் திகதி திங்கட்கிழமை சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேச சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்களினால் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. (க-47)

## பரிசளிப்பு விழாவும் மலர் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

பவளவிழாக் காணும் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும், பவள மலர் வெளியீட்டு விழாவும் இன்றும் நாளையும் கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 9.30 மணிக்கு கல்லூரி முதல்வர் இ.குணநாதன் தலைமையில் நடைபெறும் பரிசளிப்பு விழாவில் பாடசாலை, கோட்ட மட்டங்களிலும் கழகங்களுக்கிடையிலும் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகள் வழங்கப்படும்.

நாளை சனிக்கிழமை பி.ப.2.30 மணிக்கு நடைபெறும் மலர் வெளியீட்டு விழாவில் யாழ்.பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா மலர் ஆய்வுரை நிகழ்த்த, பிரதம விருந்தினரான யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மலரை வெளியிட்டு உரையாற்றுவார். (து)

## செயலமர்வு

நாளை சனிக்கிழமை மு.ப. 9.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தரம் 5 இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு 'அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள்' எனும் தொனிப்பொருளில் செயலமர்வு நடைபெறவுள்ளதாகவும் செயலமர்வில் கலந்து கொள்ளும் ஆசிரியர்கள் அதற்கான வழிகாட்டியை எடுத்து வரும்படியும் தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார். (க-29)

# சுனாமியால் காணாமல் போனோர், உயிரிழந்தோருக்கு சத்தியக் கடதாசிகளைச் சமர்ப்பித்து மரணச் சான்றிதழ்களைப் பெற முடியும்

(கொழும்பு)

சுனாமி அனாத்தத்தால் கொல்லப்பட்டவர்களின் உறவினர்களிடமிருந்து சத்தியக் கடதாசிகளைப் பெற்றுக்கொண்டபின்னர் உயிரிழந்தவர்களுக்கான மரணச் சான்றிதழ்களை வழங்க முடியுமென பிரதம நீதியரசர் சரத் என் சில்வா யோசனை தெரிவித்துள்ளார்.

இந்த அனர்த்தத்தின் போது கொல்லப்பட்டவர்களுக்கு மரணச் சான்றிதழ்களை வழங்குவதில் சிக்கல்கள் தோன்றியுள்ளன.

அநேகமான சடலங்கள் இனங் காணப்படாத நிலையில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், காணாமல் போனவர்களும் இந்த அனர்த்தத்தில் கொல்லப்பட்டிருக்கலாமென சந்தேகிக்கப்படுகின்றது.

எனவே, இச் சம்பவம் இடம் பெற்று இரு வாரங்களுக்கு மேலாகியும் காணாமல் போன அநேகம் பேர் பற்றி எவ்வித தகவல்களும் கிடைக்கப்பெறவில்லை. இதனால், இவர்களும் மரண மடைந்திருக்கலாமென அஞ்சப்படுகின்றது.

எனவே, மரணமடைந்த மற்றும் காணாமல் போனவர்கள் தொடர்பான தகவல்களை உறுதிசெய்து விட்டு இவர்களுக்கான மரணச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

இறந்தவர்கள் மற்றும் காணாமல் போனவர்களின் சார்பில் அவர்களின் உறவினர்களோ அல்லது அயலவர்களோ சத்தியக் கடதாசிகளைச் சமர்ப்பித்தால் அவர்களுக்கான மரணச்சான்றிதழ்களை வழங்க முடியுமெனவும் பிரதம நீதியரசர் தெரிவித்துள்ளார்.

இந்த யோசனையை நீதியமைச்சுக்கு தாம் சமர்ப்பித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-9)

# 255 விமானங்கள் மூலம் நிவாரணப் பொருட்கள்

(கொழும்பு)

"சுனாமி" பேரலை அனர்த்தம் ஏற்பட்டு மூன்று வாரம் கடந்து விட்டநிலையில் 58நாடுகளில் இருந்து 255 விமானங்களில் நிவாரணப் பொருட்கள் வந்துள்ளன என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திலக் ரணவிராஜா தெரிவித்தார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தினமும் தரையிறங்கும் விமானங்களில் கொண்டு வரப்படும் நிவாரணப் பொருட்களை களஞ்சியப்படுத்த தேவையான களஞ்சிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

கடந்த சில தினங்களாக விமான நிலையத்தில் நிவாரணப் பொருட்களை களஞ்சியப்படுத்தும் நடவடிக்கைகளில் சில தாமதங்கள் ஏற்பட்டு வந்துள்ளன.

எனினும் தற்போது இந்நடைமுறை சரிசெய்யப்பட்டுள்ளது என்று ஆணையாளர் ஊடகவியலாளர் மாநாட்டில் கூறினார். (க-9)

# மதவழிபாட்டு ஸ்தலங்களை புனரமைக்க உதவுங்கள்!

## யுத்தத்திற்கு எதிரான தேசிய முன்னணி எரிக்கிடம் கோரிக்கை

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் சேதமடைந்த மத வழிபாட்டு ஸ்தலங்களை புனரமைப்புச் செய்யவதற்கு வேண்டிய உதவிகளை வழங்குமாறு யுத்தத்திற்கு எதிரான தேசிய முன்னணி, நோர்வேயின் விசேட சமாதான பிரதிநிதி எரிக் சொல்ஹெய்மிடம் கோரிக்கை விடுத்தது.

பொதுமக்களுக்கு நிவாரணத்தை வழங்குவதுடன் நின்றுவிடாது வணக்கஸ்தலங்களையும் புனரமைப்பது அத்தியாவசியமானது என்றும் யுத்தத்திற்கு எதிரான தேசிய முன்னணியினர் எரிக்சொல்ஹெய்மிடம் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

இலங்கை வந்துள்ள நோர்வேயின் விசேட சமாதான பிரதிநிதி எரிச்சொல் ஹெய்மை நேற்று தேசிய முன்னணியின் பிரதிநிதிகள் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்தச் சந்திப்பில் சமய அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள். (க-9)

# மல்வத்த பீட மகாநாயக்கர் அம்பாந்தோட்டைக்கு விஜயம்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் வீடுகளை இழந்தோர் புதிய வீடுகளை அமைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் போதியளவு ஒத்துழைப்பை வழங்கும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

இதன் ஆரம்ப நடவடிக்கைகளுக்காக 5 ஆயிரம் ரூபாவை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சுனாமி அனர்த்தத்தை தேசிய அனர்த்தமாகக் கருதி இதற்குத் தீர்வுகான அனைவரும் பேதமின்றி ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்றும் பிரதமர் மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மல்வத்தபீட மகாநாயக்கர் திப்பட்டுவாவே சித்தார்த்த ஸ்ரீசுமங்களதேரரோடு அம்பாந்தோட்டையில், அனர்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மல்வத்த பீட மகாநாயக்க தேரா அம்பாந்தோட்டை மாவட்டத்தில் "சுனாமி" பேரலையினால் சேதமடைந்த விகாரைகளைப் பார்வையிட்டார்.

சுனாமி அனர்த்தத்தினால் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள பாதிக்கப்பட்ட மக்களையும் பிரதமரும், மகாநாயக்க தேரரும் பார்வையிட்டுள்ளனர். (ற-9)

# திட்டமிடல் குழுவினரை கேணல் சூசை சந்திப்பு

(முல்லைத்தீவு)

சுனாமி ஆழிப்பேரலையின் தாக்கத்தினால் அழிக்கப்பட்ட தமிழ்ப் பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கான திட்டமிடல் குழுவினரை தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 மணியளவில் முல்லைத் தீவு செயலணிக் குழுவினரின் செயலகத்தில் இவர்களைச் சந்தித்து கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை கலந்துரையாடியுள்ளார்.

இக்கலந்துரையாடலில் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு நகரை மீளக்கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை வகுத்தல் தொடர்பாகவும், குடியிருப்புக்கள் அமைப்பதற்குரிய ஏதுவான இடங்களை தெரிவு செய்தல், மற்றும் மக்களுக்கு அமைத்துக் கொடுக்கப்படவுள்ள குடியிருப்புக்கள் எவ்வாறு அமையவேண்டும் என்பது தொடர்பாகவும் அங்கு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. (ற-4)

# அறிவியல் மேம்பாட்டில்

# புத்தாக்கத்திறனியல்

(தொடர்ச்சி...) ②

*உதாரணம் :*

இத்தகைய மகிழ்ச்சி சிலவேளை ஆதாரமற்றதாகவுமிருப்பதுண்டு. மேலும் இந்நிலையில் அழகியலுணர்வும் காணப்படும். மைக்கல் அஞ்சலோ, பியற்றா என்கின்ற சிலையை வடித்த பின் அதன் அழகைப்பார்த்து சுத்தியலால் தட்டி, என்னோடுபேசு என்று வாய்விட்டு அழைத்தது அழகியலுணர்வினதும், மகிழ்ச்சியினதும் உச்சநிலை.

**5. *பரீட்சார்த்த நிலை* (verification):** இந்நிலையில் தான் கண்டறிந்த புதியதன் தன்மையை எடைபோட்டுப் பார்த்தலும், சிறப்பாக்கலும் நிகழும். ஓவியர்கள் தமது ஓவியத்தை மீள வர்ணமிடல், அல்லது கவிஞர் தம் கவிதையை மீளாய்வு செய்தல், மீள எழுதுதல் என்பன நிகழும்.

## புத்தாக்கத்திறன் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்துபவை

புத்தாக்கத்திறன் எல்லா மனிதரதும் ஆளுமையில் இயல்பாகவே அமைந்துள்ளது என்பது உளவியலாளரின் ஏகோபித்த கருத்தாகும். இதன் வளர்ச்சிக்கு பல்வேறு காரணிகள் பங்களிப்புச் செய்வது போன்று அவற்றின் வளர்ச்சியை தடைப்படுத்தவல்ல அக, புற காரணிகளும் இருக்கவே செய்கின்றன.

**அ. சாதகமானவை**

***1. புத்தாக்கத்திறன் வளர்க்கும் சமுதாயம்* (Creativogenic society) (Arieti, 1976):**

கீழ்க்காணும் பண்புகளைக் கொண்ட சமுதாயம் அதன் அங்கத்தவர்களில் புத்தாக்கத்திறனை வளர்க்க சாதகமான ஒன்றாக அமையும்.

*புத்தாக்கத்திறனை வளர்க்கவல்ல பண்பாட்டையும் மூலவளங்களையும் கொண்டிருத்தல்.

*பண்பாட்டிலுள்ள தூண்டிகளைத் திறந்த மனப்பான்மையுடன் அனுகுதல்.

*இருப்பு நிலைப் பேணலை விடுத்து புது மாற்றமடைதலை வலியுறுத்தல்.

*எல்லோருக்கும் பண்பாட்டு ஊடகங்கள் சுதந்திரமாகவும், பாரபட்சமின்றியும் கிடைக்கக்கூடியதாக இருத்தல்.

*அடக்கி ஆளல் (Oppression), பாரபட்சம் காட்டல் (Discrimination) போன்றவை குறைவாக இருத்தல்.

*மாறுபட்ட கருத்துக்களையும் சகித்துக் கொள்ளல்.

*முக்கிய ஆட்களின் தொடர்பாடல் நிகழல்.

*வெகுமதிகள், ஊக்கிகள் என்பனவற்றை ஊக்குவித்தல்.

***...பிள்ளை வளர்ப்பு, வழிநடத்தல் முறை:***

சுயாதீனமாக இயங்கக்கூடிய நிலை புத்தாக்கத்திறனில் வளர்ச்சியை அதிகரிக்கச் செய்கின்றது. சிறுவர்கள் தம் பெற்றோர், ஆசிரியர்கள் ஆகியோருடனான உறவில் சுதந்திரத்தை அனுபவிக்கும் போது அவர்கள் புத்தாக்கத்திறனில் விருத்தியடைவர். ஆனால் இந்த சுதந்திரம் எந்தப் பணிக்குக் கொடுக்கப்படுகின்றது என்பது முக்கியமான விடயம். ஆசிரியர்கள், பெற்றோர் தம் பிள்ளைகளை சுயாதீனமாக இயங்கவிடுதல் அவர்களில் புத்தாக்கத்திறனை வளர்க்கும் என்பதை உணர்ந்து செயற்படுதல கருத்தில் கொள்ளப்படவேண்டும் (Rajskind, 1982).

***3. தனித்திருத்தல்:***

ஒருவர் தனித்தியங்கும்போது புத்தாக்கத்திறன் கொண்டிருப்பர். குழுவாக இயங்கும்போது அவர் பொறுமையின்றியும் புத்தாக்கத்திறனின்றியும் காணப்படுவர். எனவே தனித்து இயங்கல் புத்தாக்கத்திறன் வளர்ச்சிக்குச் சாதகமானதாக அமைகின்றது. (Go, Fernando and Onglatco, 1986).

***4. தன்னம்பிக்கை:***

புத்தாக்கத்திறனில் தன்னம்பிக்கை முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது (Coopersmith, 1967).

***5. புதுமையான சிந்தனை முறை* (Divergent Thinking):**

ஒரு பிரச்சினை அல்லது கேள்விக்கு இதுவரை சிந்திக்கப்படாத முறையில் பொருத்தமான புதிய தீர்வுகள் அல்லது விடைகள் என்பனவற்றை உருவாக்கல் புத்தாக்கத்திறனின் வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்புச் செய்கின்றது.

**ஆ. பாதகமானவை**

***1. பிள்ளை வளர்ப்பு முறை:***

பிள்ளைகளோடு மிகக் கடுமையாக நடத்தல், அடக்கியாளல், பிள்ளைகளைத் தாம் எப்போதும் கவனிக்க வேண்டும் என்ற மட்டுமீறிய பாதுகாக்கும் உணர்வு என்பன கொண்ட பெற்றோரது பிள்ளைகள் அதிக புத்தாக்கத்திறன் கொண்டிருப்பதில்லை (Walsh, 1958: Shaw& Dutton, 1962: & Macaranas, 1968). மேலும், சர்வாதிகாரப்போக்கும், கடும் போக்கும் கொண்ட பிள்ளை வளர்ப்பும், பத்தாம்பசலி வழிநடத்தலும் புத்தாக்கத்திறனுக்குத் தடையாக அமையும். இவ்வாறே, பிள்ளைகள் பெற்றோருடன் மட்டுமீறி ஒட்டிக்கொண்டிருத்தல், அவர்களிலேயே அளவுமீறித் தங்கிவாழும் போக்கை வளரச் செய்வதால் புத்தாக்கத்திறன் வளர்ச்சிக்குத் தடையாகும் (Abogando et al, 1977).

***2. கட்டுப்பாடு, ஒழுங்கு:***

அளவுக்கதிகமான கட்டுப்பாடு, ஒழுங்கு என்பனவற்றை வலியுறுத்தும் ஒருகல்வி அல்லது பண்பாட்டு மதிப்பீடுகள் சிறுவர்களின், இளைஞர்களின் ஆரோக்கியமான புததாக்கத்திறன் வளர்ச்சிக்கு நிச்சயம் பாதகமாக அமையும் (Medenilla, 1980).

***3. படிந்துபோதல்* (Conformity):**

படிந்துபோதல் புத்தாக்கத்திறனை தடைப்படுத்திவிடும். அதாவது பிறரின் அழுத்தத்திற்கு தன்நடத்தை, மனப்பாங்கு என்பவற்றை மாற்றிவிடும் குணம் உடையவர்களில் புத்தாக்கத்திறன் வளர்ச்சியடைவதில்லை. அப்போக்கு தம் கற்பனைத்திறன், சிந்தனைகள் என்பவறறில் இவர்களுக்குள்ள நம்பிக்கையைப் பலவீனப்படுத்தி புத்தாக்கத்திறன் வளரமுடியாமைக்குக் காரணமாகிவிடுகின்றது. அதாவது தனித்துவத்தைப் பேணல் இத்திறன் வளர்ச்சிக்கு அவசியம்.

பேலரின் ஆய்வின்படி (Paler, 1975) புத்தாக்குனர்கள் செல்வாக்குடையவர்களின் கருத்துக்குப் படிந்துபோவதில்லை. அவ்வாறு செய்யத் தவறுபவர்கள் புத்தாக்கத்திறன் கொண்டு விளங்குவதில்லை.

***4. அறிவுறுத்தல் வழங்கல்:***

புத்தாக்கம் செய்யும் விடயத்தில் அறிவுறுத்தல் வழங்கலானது தன் உளத்திறனில் நம்பிக்கையற்றவர்களிலும், அச்சக் குறைபாடுடையோரிலும் செயற்படல் குறைவை ஏற்படுத்துகின்றன (Harrington, 1975). புத்தாக்குனர்கள் அறிவுறுத்தல் எனும் வடிவில் உளநெருக்கீடுகள், கட்டுப்பாடுகள் என்பனவற்றிக்குத் தாம் உட்படுத்தப்படுவதை விரும்புவதில்லை. காரணம் இது அவர்களது புத்தாக்க முயற்சியில் குறுக்கீடு செய்கின்றன (Jaben, Hudson, Wrelan & Treffinger).

வலுவிழந்த மாணவர்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி அறிவுறுத்தல் வழங்கலானது வலுவிளந்தோரில் மட்டுமல்ல சாதாரணமானவர்களிலும் கூட புத்தாக்கத்திறனை வளர்க்க எவ்வகையிலும் உதவுவதில்லை.

## பிரச்சினை தீர்த்தலில் புத்தாக்கத்திறன்

** பிரச்சினை மீள்வரையறையாக்கல்:*

ஒரு பிரச்சினையின் எல்லைகள் அதுபற்றிய ஒருவர் கொண்டிருக்கும் முற்கருத்துகள் என்பன மாற்றியமைக்கப்படலாம். ஒரு பிரச்சினையானது அது ஆரம்பத்தில் உள்ளதற்கொப்ப கருத்துநிலை அல்லது திட்டவட்டமான நடைமுறை நிலை என்ற இரண்டு நிலைகளில் மீளமைப்புச் செய்யப்படலாம் (Brown & Walter, 1990).

ஒரு பிரச்சினையை அதன் உபபிரச்சினைகளாகப் பிரித்து அவ் ஒவ்வொரு உபபிரச்சினைக்கான சாத்தியமான தீர்வுகள் ஆராயப்படலாம். அவ்வாறு ஆராயும்போது முழுப்பிரச்சினைக்குமான ஒரு புதிய தீர்வைக்காண உதவியாக அமையும் (de Bono, 1967).

**விமர்சனக் கண்ணோட்டம் கொண்டிருத்தல்:*

முற்கருத்துகள் அல்லது ஆதாரங்களை உள்ளபடியே ஏற்காது அவற்றை விமர்சனக் கண்ணோட்டத்துடன் மதிப்பிட்டு ஒவ்வொன்றினதும் விளைவுகள் பற்றியும் சிந்திக்கவேண்டும். அவ்வாறே அவற்றுக்கான விதிவிலக்குகளையும், முரண்பாடுகளையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

** ஒப்புமைகளைப் பயன்படுத்தல்:*

ஒப்புமைகள் புதிய உண்மைகளை வெளிப்படுத்தவல்லன. மிருகங்களின் நடத்தைகளில் ஒப்புமை தேடல் மனித நடத்தை பற்றி புதிய உண்மைகளை அறிந்துகொள்ள உதவும். பறவையைக் கண்டான் விமானம் படைத்தான் என்ற பாடலும் இக்கருத்தையே வலியுறுத்துகின்றது.

உற்பத்தியாளர்கள் சருகு இலைகளை சற்று ஈரமாக்குவதன் மூலம் அவற்றை எளிதாக பொதி செய்யமுடியும் என்பதை அவதானித்ததன் காரணமாக உருளைக்கிழங்குச் சீவல்களை தகரடப்பாக்களில் அடைத்து வியாபாரம் செய்யக் கற்றுக்கொண்டார்கள்.

** வித்தியாசமாகச் சிந்தித்தல்:*

எது மிகவும் அளவையியல் ரீதியானது என்று சிந்திப்பதற்குப் பதிலாக அளவையியல் கடந்தும் சிந்திப்பது தீர்வுகளைப் பெற உதவும். ஒரு பொருள் பெரும்பாலும் பாவிக்கப்படும் விதத்தில் இனி பாவிக்கக்கூடாது என்று தடைபோட்டால் எவ்வகையில் பயனளிக்கும் எனச் சிந்தித்தல் அதன் புதிய பயன்பாடுகளை கண்டறிய உதவும்.

*உதாரணம்:*

பேனையை எழுதுவதற்குப் பதிலாக வேறு எதற்கெல்லாம் பாவிக்கலாம் எனச் சிந்தித்தல். நீங்கள் சந்தித்துள்ள விடயத்தை இன்னொருவர் எவ்வாறு கையாள்வார் எனச் சிந்தித்தல் தீர்வு பற்றிய புது உணமைகளைக் கண்டறிய உதவி செய்யும்.

விவாகரத்துச் செய்வதற்கு ஆற்றுப்படுத்தல் பெறச் சென்ற தம்பதியிடம் உளஆற்றுப்படுத்துனர், நீங்கள் இருவரும் ஒரு தீவில் தனியாக விடப்பட்டு உங்களை மீட்க எவரும் வரமாட்டார்கள் என்பது தெளிவானால் எவ்வாறு வாழ்வு அமையும் என்ற கேள்வியைத் தொடுத்துச் சிந்திக்க வைத்தார். அவ்வேளையில் இருவரும் வித்தியாசமாகச் சிந்திக்கத் தொடங்கினர். இறுதியில் தாம் ஒருவர் மற்றவரின் குறைகளை எவ்வாறு சகித்து அல்லது ஏற்று வாழமுடியும் என்பதைக் கண்டறிந்து மீண்டும் சேர்ந்து வாழத் தொடங்கினர்.

**தீர்வுகாண் முறைகளைப் பயன்படுத்தல்*

சில பிரச்சினைகளுக்கு ஒரேயொரு சரியான தீர்வுதான் சாத்தியம் எனும் நிலையிருக்கும்போது அதைத் தீர்ப்பதற்கு ஏற்கனவே உருவாக்கப்பட்ட ஒரு தீர்வுமுறை இருக்குமானால் அதையே பயன்படுத்தி விரைவாகவும் சிறப்பாகவும் தற்போதைய பிரச்சினைக்குத் தீர்வு காணலாம்.

**வெவ்வேறு தீர்வுகளை முயற்சித்தல்:*

ஒரு பிரச்சினையைத் தீர்க்க வெவ்வேறு முறைகளைப் பயன்படுத்தத் தயங்கக்கூடாது. ஒரு விடயத்தை வாசித்துப் புரிவது கடினமாக இருக்கும்போது வரைபடமாக்கி அல்லது அட்டவணையாக்கிப் பார்க்கின்றபோது அல்லது நடித்துப் பார்க்கும்போது அல்லது கணிதச் சமன்பாடாக அமைக்கும்போது பொருத்தமான தீர்வுகள் தோன்ற வாய்ப்பு அதிகம். தீர்வுகள் யதார்த்தமற்றதாகத் தோன்றினாலும் தயக்கமின்றி எதையும் சிந்தித்து உடனே அவற்றைப் பட்டியலிட்டு அதன் பின் அவற்றின் நடைமுறைப் பயன்பற்றி ஆய்[illegible]ருத்தமான தீர்வை நெருங்க உதவும். (Sinnott, 1989; Halperm 1993).

அருட்திரு.
இராசேந்திரம் ஸ்ரலின்

## புத்தாக்கத்திறனை வளர்த்தல்

புத்தாக்கத்திறனானது பயிற்சிகளால் வளர்தெடுக்கப்படக் கூடியது. ஒருவருக்கு இதற்கான சுதந்திரம் இருப்பது முக்கியமானது. அத்தோடு ஒருவரிலுள்ள எந்தெந்தத் தேவைகள், விருப்பங்கள், மனப்பாங்குகள் என்பன புத்தாக்கத்திறனை வளர்க்க உதவுகின்றன என்பதை அறிய முயலவேண்டும் என்பது கில்போட்டின் (Guilford, 1967) கருத்து.

மூர் (Moore) என்பவரின் கருத்துப்படி பயிற்சி, அத்துறையில் ஈடுபடல், கடின உழைப்பு என்பன வெற்றிநிலையிலிருக்கும் புத்தாக்குனர்களின் வாழ்வில் வெளிப்படையாகக் காணக்கூடியவை.

உங்களில் ஒரு திறன் இருப்பதாகக் கண்டால் அதை வளர்த்தெடுப்பதில் தீவிரமாக இருக்கவேண்டும். அதுபற்றி எதையெல்லாம் அறிய முடியுமோ அவை அனைத்தையும் அறிய முயற்சிக்க வேண்டும். அதை வளர்க்கக் கடின முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

*நன்றி - கல்வியியலாளன்*

# ஈராக்கில் கார் குண்டுவெடிப்பு 10 பேர் பலி; 5பேர் படுகாயம்

ஈராக்கில் சதாம் ஆதரவுக் கொரில்லாக்களின் கைவரிசையால 3 இடங்களில் நடைபெற்ற கார் குண்டுவெடிப்பில் 10பேர் பலியானதுடன் 5 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

சதாம் ஆட்சி வீழ்த்தப்பட்டபின், ஈராக்கில் வரும் 30 ஆம் திகதி பொதுத்தேர்தல் நடக்கவுள்ளது. இத்தேர்தலை நடக்கவிடாமல் செய்ய, சதாம ஆதரவுக் கொரில்லாக்கள் குண்டுகளை வெடிக்கச்செய்து வருகின்றனர்.


தேர்தல் அலுவலகம் மற்றும் பொலிஸ் நிலையங்கள் அதிக அளவில் தகர்க்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் நேற்றுமுன்தினம பாக்தாத்தில் உள்ள ஆஸ்திரேலிய தூதரகத்தின் மீது வெடிகுண்டு நிரபபட்ட கார் வேகமாக மோதி வெடித்தது. இந்தச் சம்பவத்தில் இரண்டு பேர் கொல்லப்பட்டனர். ஆறு பேர் படுகாயமடைந்தனர். ஆஸ்திரேலியர்கள் யாரும் இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்படவில்லை.

பாக்தாத்தின் புறநகர்ப் பகுதியான கராடா என்ற இடத்தில் பொலிஸ் நிலையத்தை தாக்கும் விதத்தில் மற்றொரு கார்க்குண்டு வெடிக்கச் செயயப்பட்டது. இந்தத் தாக்குதலில ஒரு பெண் பொலிஸ் உட்பட ஆறு பேர் பலியாயினர். ஐந்து பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பாகதாத்தின் மேற்குப் பகுதியில் பழைய விமானநிலையம் அருகே உள்ள இராணுவமுகாம் மீது மற்றொரு கார்க்குண்டு தாக்குதல் நடந்தது. இந்தச் சம்பவத்தில் ஒரு ஈராக் வீரர் உட்பட இரண்டுபேர் பலியாயினர். ஐந்துபேர் படுகாயமடைந்துள்ளனர். (து)

# டென்மார்க் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது



டெனமார்க் பாராளுமன்றம் அதற்குரிய நாலாண்டு காலம் முடிவதற்கு முன்னரே கடந்த செவ்வாய்க் கிழமை காலை கலைக்கப்பட்டு விட்டது.

பாராளுமன்றம் கலைக்கப்படும் செயதியை அறிவிப்பதற்காக விசேடமாகக் கூட்டப்பட்ட பாராளுமன்றக் கூட்டத்தில் பிரதமர் இதனை அறிவித்தார். புதிய தேர்தல் பெப்ரவரி 8ஆம் திகதி நடைபெறும்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதற்கான காரணத்தைக் செய்தியாளர் மாநாட்டில் விளக்கிக் கூறிய பிரதமர், டென்மார்க்கில் நகரசபைகளை ஒன்றிணைத்து புதிய ஒன்றிணைந்த நகர்சபைகளை உருவாக்குவது தொடர்பாக மக்கள கருத்தை அறிவதற்காகக் கடந்த நவம்பர் மாதத்தில் தேர்தலை நடத்தவேண்டுமென எதிர்க் கட்சிகள் கேட்டிருந்ததற்கமையவே பாராளுமன்றம் கலைக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

• டென்மார்க்கில் ஆட்சியிலுள்ள அரசு பொதுத்தேர்தலை அறிவிக்கும்போது மற்றைய கட்சிகள் தேர்தல் பிரசாரம் நடத்துவதற்கு 21 நாள் அவகாசம் வழங்கப்படவேண்டுமென டெனிஸ் அடிப்படைச் சட்டவிதிக்கமைய சரியாக 21 நாள் அவகாசம் வழங்கி பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (து)

# 67 வயதில் குழந்தை பெற்று சாதனை





ருமெனியா நாட்டைச் சேர்ந்த 67 வயதுப் பெண்மணி ஒருவர் இரட்டைக் குழந்தைகளைப் பெற்றுச் சாதனை புரிந்துள்ளார்.

அதன்மூலம் உலகிலேயே அதிக வயதில் குழந்தை பெற்ற பெண்மணி என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

இத்தகவலை ருமேனிய தொலைக் காட்சி தெரிவித்துள்ளது.

அட்ரியானா இலியஸ்கு (67) பல்கலைக்கழகத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற பேராசிரியை.

கடந்த 9 ஆண்டுகளாக அவர் கருத்தரிப்புக்கான சிகிச்சை பெற்று, அதன்மூலம் கருவுற்றார். அவருக்கு இரட்டைப் பெண்குழந்தைகள் பிறந்தன.

அதில் ஒன்று உடனே இறந்துவிட்டது. ஆனால் 1.4 கிலோ எடையுள்ள இன்னொரு குழந்தை நலமாக இருப்பதாக டாக்டர்கள் தெரிவித்தனர். (து)


# பாக்.தீவிரவாதிகள் ஜம்மு.காஷ்மீரில்

## இந்திய இராணுவத்தால் சுட்டுக்கொலை



காஷ்மீர் ரஜோரி மாவட்டத்தில் புத்ஹால் காட்டுப்பகுதியில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் பதுங்கியிருபபதாக உறுதியான தகவல்கள் கிடைத்ததையடுத்து இராணுவவீரர்கள் நேற்றுமுன்தினம் அதிகாலை 3.30 மணிக்கு தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.


இராணுவ வீரர்களைக் கண்டதும் தீவிரவாதிகள் சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டனர். பதிலுக்கு இராணுவவீரர்களும் சுட்டனர். அந்தப் பகுதியில் சில மணிநேரம் தொடர்ந்து துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதில் நான்கு தீவிரவாதிகள சுட்டுக்கொல்லப்பட்டனர்.



இவர்கள் அனைவரும் ஹிஸ்புல் முஜாகிதீன் என்ற தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள். அவர்களில் ஒருவனின் அடையாளம் தெரியவந்துள்ளது. அவன பெயர் அபு சல்மா. தீவிரவாத அமைப்பின் ஒருபகுதி கமாண்டராக இவன் செல்பட்டு வந்துள்ளான.

தற்போதும் அந்தக் காட்டுப் பகுதியில் தொடர்ந்து துப்பாக்கிச் சண்டை நடந்துவருகிறது.

தீவிரவாதிகள் மறைந்திருந்த பகுதியில் இருந்து மூன்று ஏ.கே.ரகத துப்பாக்கிகள், துப்பாக்கித் தோட்டாக்கள், 13 கையெறி குண்டுகள், ஆவணங்கள் ஆகியவை கைபபற்றப்பட்டுள்ளதாக இராணுவ அதிகாரிகள் கூறினர். (து)



**தாய்லாந்தில் யானைகளைப் பல்வேறு வேலைகளுக்குப் பயன்படுத்துகின்றனர். சமீபத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் யானைகள் மீட்புப் பணியில் ஈடுபட்டுவருகின்றன. மனிதர்களைப் போல செயல்படும் இந்த யானைகளுக்குத் தற்போது, கழிப்பறையில் உட்கார்ந்து மலம் கழிக்கும் முறை சொல்லிக்கொடுக்கப்படுகிறது. சியாங்மாய் மாகாணத்தில் உள்ள யானைகள் முகாமில் ஐந்து வயதான தீவ் என்ற இந்த யானை கஷ்டப்பட்டு உட்கார்ந்து பயிற்சி செய்கிறது.**

# இந்திய பெருங்கடலில் நிலநடுக்கம்

(புதுடில்லி)

இந்தியப் பெருங்கடலில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவில் இது 5.2 ஆகப் பதிவானது.

இந்தியப் பெருங்கடலில் கடலுக்குள் நேற்றுமுன்தினம் 9.30 மணியளவில் திடீரென நிலநடுக்கம ஏற்பட்டது.

ரி.க்டர் அளவில் இது 5.2 ஆகப் பதிவானது. இதனால் ஏற்பட்ட பாதிப்புக் குறித்து உடனடியாகத் தகவல்கள் இல்லை என இந்திய வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது. (து)

உலக தரிசனம்

# ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

அரசாங்க ஊழியர்களது ஓய்வூதியங்கள் 27.12.2004ஆம் திகதி வெளியிடப்பட்ட **9/2004**ஆம் இலக்கப் பொதுநிர்வாகச் சுற்றறிக்கை மூலம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

எனவே 1.12.2004ஆம் திகதிக்குப் பின்னர் ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்களது ஓய்வூதியங்கள் கீழ்வருமாறு கணிக்கப்படுமென ஓய்வூதியப் பணிப்பாளர் கே.ஏ.திலகரத்ன அறிவித்துள்ளார்.

1.12.2004ஆம் திகதி பதவியிலிருந்து, அத்திகதிக்குப் பின்னர் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களது ஓய்வூதியக் கொடுப்பனவுகள் கணிக்கபபடும்போது அதிகரிக்கப்பட்ட மொத்தச் சம்பளம் ஆலோசனைக்கு எடுததுக்கொள்ளப்படவேண்டும்.

விகிதங்கள் கணிக்கப்படும்போது இணைப்பு 'A' இல் உள்ள புதிய விகிதத்திட்டம் அமுல்படுத்தப்படவேண்டும்.

1.12.2004ஆம் திததிக்குப் பின்னர் ஓய்வுபெற்றவர்களது ஓய்வூதிய விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும்போது 30 ஜுன் 2004இல் ஓய்வூதியத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட **9/2004**ஆம் இலக்கச் சுற்றறிக்கை கவனத்தில் கொள்ளப்படவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது (து-5)

# சுனாமியால் பாதிப்படைந்த தொழில்சார் நிறுவனங்களின் விபரங்கள் திரட்டப்படுகின்றன

## இன்றும் நாளையும் பதிவுகளை மேற்கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

கடந்த டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமிப் பேரலை அனர்த்தத்தால் பாதிப்புற்ற கைத்தொழில்கள், வியாபார நிறுவனங்கள் தொடர்பான பதிவினை மேற்கொள்வதற்குக் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் வடமாகாணக் காரியாலயம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கைத்தொழில்கள், வியாபார நிறுவனங்கள் தொடர்பான பதிவுகள் இன்று வெள்ளிக்கிழமையும், நாளை சனிக்கிழமையும் நடைபெறவுள்ளதால், சம்பந்தப்பட்ட அனைவரையும் பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு வருகைதந்து மேற்படி பதிவினை மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன் இப்பதிவிற்கு விவசாயம், கால்நடை வளர்ப்புத் தவிர்ந்த ஏனைய தொழில் முயற்சியாளர்கள் அனைவரையும் தவறாது வருகை தந்து பதிவினை மேற்கொள்ளுமாறும் வடமாகாண கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பிரதிப் பணிப்பாளர் தெ.பாலசுப்பிரமணியம் கேட்டுள்ளார். (ர)

சூழ்ச்சி முடிபு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது - குறள்

வலம்புரி

# ஜனாதிபதியின் அறிவிப்பும் ஐ.தே.கட்சியின் மௌனமும்

அடுத்துவரும் ஐந்து ஆண்டுகளுக்குள் எந்தத் தேர்தலும் நாட்டில் நடைபெறமாட்டாது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்துள்ளார்.

அவசரகாலப் பிரகடனத்துடன் ஜனாதிபதியால் விடுக்கப்பட்ட அறிவிப்பு குறித்து அவதானமாக ஆராயவேண்டியது அரசியலாளர்களின் கடமையாகும்.

2005 இல் நடைபெறவேண்டிய ஜனாதிபதித் தேர்தல் 2006 ஆம் ஆண்டிலாவது நடைபெற வேண்டும். ஒருவர் இரண்டு தடவைகள் மட்டுமே நாட்டின் ஜனாதிபதியாக இருக்க முடியும் என அரசியல் யாப்பு பரிந்துரைக்கின்றது. இருந்தும் மூன்று தடவைகள் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டு ஜனாதிபதியின் பதவிக்கால முடிபு பற்றி சர்ச்சைகளையும், குழப்பங்களையும் ஏற்படுத்திய பெருமை சந்திரிகா குமாரதுங்க அவர்களுக்கே உண்டு.

ஜனாதிபதியின் பதவிக்கால முதிர்வில் ஏற்பட்ட சர்ச்சைகளுக்கு நாட்டின் உயர்நீதிமன்றம் கூட முடிபுகாணாது விட்டுவிட்டது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஓர் முடிபை தராதபோதிலும், எதிர்க் கட்சியாக இருக்கக்கூடிய ஐக்கிய தேசியக் கட்சியும் மௌனமாக இருப்பதிலிருந்து ஜனாதிபதியின் பதவிக்காலம் 2006 ஆம் ஆண்டுடன் நிறைவு பெறுவதாகவே கருதிக்கொள்ள வேண்டும்.

2005 இல் முடிபடைய வேண்டிய பதவி 2006 இலேயே முடிபடையப் போகிறது. பரவாயில்லை. ஒரு வருடம் தானே! மீண்டும் ஜனாதிபதியாகும் சந்தர்ப்பம் சந்திரிகா குமாரதுங்கவுக்கு அறவே கிடையாது. அதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எந்த ஒரு உறுப்பினருக்கும் அடுத்த ஜனாதிபதியாகும் சந்தர்ப்பமும் இல்லை.

ஆக, அடுத்த ஜனாதிபதி நானே! என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் அசையாத நம்பிக்கை. 2006 இல் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுகின்றபோது நாட்டில் நிறைவேற்று ஜனாதிபதியாகத் தான் தெரிவு செய்யப்படுவது என்ற நம்பிக்கையில் இருந்த ரணிலுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உள்ளித் தைலம் தடவுவது போல அடுத்துவரும் ஐந்து ஆண்டுகளுக்கு நாட்டில் தேர்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை எனக் கூறியுள்ளார்.

ஒரு நாட்டின் பொறுப்புவாய்ந்த பதவியில் இருக்கின்ற ஒருவர் ஐந்து ஆண்டுகளுக்குள் தேர்தல் நடைபெறாது எனக் பகிரங்கமாகக் கூறியுள்ளார் எனில், அதனை ஓர் சாதாரண விடயமாக கருத முடியாது.

ஏதோ ஒரு காரணத்தை அடிப்படையாகக் கொண்டே அவர் இதனை கூறியுள்ளார் என எடுத்துக் கொள்வதில் எந்தத் தவறும் இல்லை. ஏனெனில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியைக் கலைத்து மீண்டும் தேர்தல் நடத்திய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக தனது குடும்ப எதிரியாக இருக்கக் கூடிய ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்தவர்.

ஆட்சியைக் கலைத்தமை தவறான செயல் - சமாதான விரோத செயல் என்றெல்லாம் கூறப்பட்ட வேளையில், ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதிக் கெதிராக வலுவான போராட்டத்தை நடத்தவில்லை. பேராசிரியர் பீரிஸ், மிலிந்த மொறகொட போன்றவர்கள் ரணிலின் பக்கத்தில் இருந்துபோதிலும் சந்திரிகாவுக்கு எதிராக வெகுஜன போராட்டம் எதனையும் ஐக்கிய தேசியக் கட்சி நடத்தத் தவறியமை அந்தக் கட்சியின் பலவீனத்தையும், ஜனாதிபதியின் பலத்தையும் வெளிப்படுத்துவதாக உள்ளது.

எதுவாயினும் தற்போது ஜனாதிபதியின் அறிவிப்பு தேர்தல் இல்லை என்பதாக இருந்த போதிலும் ஐக்கிய தேசியக் கட்சி மௌனம் சாதிப்பதன் அர்த்தம் தான் என்ன? இயலாமையா? அல்லது பொறுத்தார் பூமி ஆள்வார் என்ற தத்துவமா? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# புனர் நிர்மாண வேலைகளை முன்னெடுக்க அரசிடம் முறையான திட்டமெதுவும் இல்லை

## ஜே.வி.பி.அமைச்சர் லால்காந்த குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்திடம் இன்னமும் புனர்நிர்மாண மற்றும் மீள் கட்டுமானப் பணிகளை திறம்படச் செய்வதற்கு கிடைக்கக் கூடிய வளங்களை சரியான முறையில் பயன்படுத்தக்கூடிய விசேட திட்டம் எதுவும் கைவசம் இல்லை என ஜே.வி.பி., அமைச்சர் லால்காந்த தெரிவித்துள்ளார்.

முக்கிய பெரிய வர்த்தகர்களிடம் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் புனர்நிர்மாண மற்றும் மீளமைப்பு கட்டுமானப் பணிப் பொறுப்புக்களை ஒப்படைக்க எடுத்த அரசின முடிவை எதிர்த்து அரசில் அங்கம் வகிக்கும் கூட்டணிக் கட்சிகளில் ஒன்றான ஜே.வி.பி அமைச்சரான கே.டி. லால்காந்த நேற்றுமுன்தினம் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

இதுபற்றி அமைச்சர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இப் பணிகளை ஏற்றுகொள்ளவிருக்கும் வர்த்தகர்களை, கூறியதை செய்யும் வெறும் சோம்பேறித்தனம் பிடித்தவர்கள் என வர்ணித்ததுடன், இவர்கள் அரசினை படுகுழிக்குள் தள்ளுவதை தவிர வேறு எதனையும் சரியாக செய்யத் தெரியாதவர்கள். படையினரும் ஜே.வி.பி கட்சித் தொண்டர்களும உடனடி நிவாரண நடவடிக்கைகளில் இறங்கியிராவிடில், தொற்று நோய்களின் வடிவில் நாடு இன்னொரு பெரும் பேரழிவினை எதிர்நோக்கியிருக்கும்.

அரசின் புதிய கொள்கையால், இவ்வாறு உடனடி நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் தற்போது புனர்நிர்மாண மற்றும் மீள் கடடுமானப் பணிகளில் ஈடுபடமுடியாமலும் உள்ளது.

கிராமங்களை மையமாகக் கொண்ட எத்தனையோ தொழிலதிபர்கள் இப் பணிகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை செய்யக் கூடிய தயார் நிலையில் இருக்கும் போதும், அனைத்துக் கட்சிகளையும் ஒற்றுமையாக பணியாற்றக் கோரிக்கை விடுத்து கொண்டும், அரசு சோம்பேறித்தனம் பிடித்த பெரும் வர்த்தகர்களை நாடியிருப்பது ஏன் என்று தெரிய வில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

(ற-4)

# சுனாமி அனர்த்தத்தை சாதகமாக பயன்படுத்தி அரசியல் லாபம் தேடும் முயற்சிகளில் ஜே.வி.பி

## பாராளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி கண்டனம்

(மட்டக்களப்பு)

சுனாமி அனாத்தம் காரணமாக பாதிக்கபபட்ட நிலையில் வாழும் மக்கள் சமாதானத்தை வேண்டி நிற்கும் வேளையில் ஜே.வி.பி யினா மீண்டும் இனவாதத்தைப் பரப்பும் நடவடிக்கைகளில் ஈடுபடும் செயற்பாடுகளை மட்டக்களபபு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெயானந்தமூாத்தி வன்மையாக தனது கண்டனத்தைத் தொிவித்துள்ளாா.

ஐககிய நாடுகள் செயலாளர் நாயகம் கோபி அனானுக்கு ஜே.வி.பா. யினா அனுப்பி வைத்துள்ள அறிக்கையைக் கண்டித்து பாராளுமன்ற உறுப்பினா எஸ்.ஜெயானந்தமூர்ததி அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளாா. சுனாமியினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு பிரதேசங்களை புனரமைப்பு செய்வதற்கான நிதியினை வழங்கினால் அதனைக் கொண்டு விடுதலைப் புலிகள் துப்பாக்கி வாங்குவாாகள் என்று ஜே.வி.பி யினர் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கோபி அனானுக்கு அறிக்கை சமா்ப்பித்துள்ளனர்.

தற்போது இந் நாட்டு மக்கள் சோகத்தினால் மூழ்கியுள்ள இக் கால கட்டத்தில் ஜே.வி. பி யினா இவ்வாறான கருத்துககளை வெளியிடுவதை வன்மையாகக் கண்டிக்க வேண்டும். தற்போது ஏற்பட்டுள்ள சுனாமி அனா்த்தத்தினைப் பயன்படுத்தி ஜே.வி.பி. யினர் அரசியல் லாபம் தேட முயற்சிக்கின்றனர்.

கூட்டமைப்பு எம்.பி. க்களை கொச்சைப்படுத்தும் வகையில் ஜே.வி.பி யினா நடந்து கொள்ளும் நடவடிக்கையானது எதிர் காலத்தில் ஆரோக்கியமான சூழலை ஏற்படுத்தாது. நாட்டு மக்கள சமாதானத்தை விரும்பி நாடிச் செல்லும் போது ஜே.வி.பி யினா் சமாதானத்தைக் குழப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் ஜெயானந்தமூா்த்தி அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளாா்.

(ப)

# மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உயர்மட்டக் குழு இன்று யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)

மததிய சுற்றாடல் அதிகார சபையின் ஆலோசகர்கள் அடங்கிய உயா்மட்டக் குழுவினா் இன்று வெள்ளிக்கிழமை யாழ்.குடாநாட்டுக்கு வருகை தரவுள்ளனா்.

இககுழுவினா் இங்கு மூன்று நாட்கள் தங்கியிருந்து பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் ஆய்வு செய்வதுடன, இப்பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனரமைப்பு நடவடிக்கைகளை அறிக்கையாகத் தயாரித்து தலைமைப்பீடத்திற்கு சமா்ப்பிக்கவுள்ளனா்.

அததுடன்,யாழ். மாவட்ட அரச .அதிபா் கே.கணேஷ் மறறும் மேலதிக அரச அதிகாரிகளையும் இக் குழுவினா் சந்தித்து யாழ்.மாவட்டத்தின் தேவைப்பாடுகள் குறித்து விரிவாக ஆராயவுள்ளனா்.

சுனாமியினால் சேதமடைந்துள்ள மணற்காடு கிராமத்தை புனரமைப்பதற்கு மத்திய சுற்றாடல் அபிவிருத்தி அதிகார சபை பொறுப்பேற்றுள்ளது.

இதற்கமைய கடந்த 7,12ஆம் திகதிகளில் இப் பிரதேசத்தில் பாதிப்புக்குள்ளான குடும்பங்களுக்கு 100 கூடாரங்கள், உடுபுடவைகள், பாதுகாப்பு கையுறைகள், உலா் உணவுப் பொருட்கள் மற்றும் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரிடம் தண்ணீரை சுத்திகரிக்கும் மருந்துகள், பனடோல்கள், தொற்றுநீக்கி மருந்துகள் எனபன இவ் அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் ஒரு தொகுதி உலா் உணவுப்பொருட்களும் மருந்துப பொருட்களும் எதிா்வரும் 25ஆம் திகதி வழங்கப்படவுள்ளதாக யாழ். பிராந்திய மத்திய சுற்றாடல் அபிவிருத்தி அதிகார சபையின் இணைப்பாளர் தெரிவித்தாா்.

இச செயற்பாடுகளுக்கு மத்திய சுற்றாடல் அபிவிருத்தி அதிகார சபையின் முன்னாள் தலைவரும் தற்போதைய ஆலோசகருமான அஜித்தா பி[illegible]ஸரா தென்பகுதியில் இருந்து சேகரித்த மற்றும் அரச சாா்பற்ற [illegible]களில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பொருட்களையும் இங்கு அனுப்பி வைக்கபபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ற-4)

# வாழ்க்கைச்செலவு அதிகரிப்புக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படாமையே இலஞ்ச ஊழல்களுக்கு காரணம்

## ஆய்வின் மூலம் கண்டறிவு

(கொழும்பு)

அதிகரித்த வாழ்க்கைச் செலவுக்கு ஏற்றவகையில் அரச ஊழியா்களுக்கு அதிகரித்த சம்பளம் கிடைக்காமையே அரசாஙக சேவையில் இலஞ்ச ஊழல் இடம்பெறுவதற்கான முக்கிய காரணம என்று ஆய்வு ஒன்றின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

தேவைகளை அவசரமாகப் பூா்த்தி செய்வதற்காகவே கூடுதலாக இலஞ்சம் பெறப்படுவதாக இலஞ்ச ஊழல் மோசடிக் குற்றத்தடுப்பு ஆணைக்குழுவின் நிவாரண சேவைப் பணிப்பாளா் நாயகம் தெரிவித்துள்ளாா்.

பொலிஸ் உத்தியோகத்தா்களுக்கு இலஞ்சம் கொடுப்பதே மிக எளிதாக இடம்பெறுவதாகவும் இவ் ஆய்வின் மூலம் தெரிய வந்துளளது.

அடுத்து மோட்டாா் போக்குவரத்து திணைக்களத்திலேயே கூடுதலாக இலஞ்ச ஊழல் இடம்பெறுவதாகவும் அவ் ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாஙகத் திணைக்களங்களில் கடந்த வருடம் இடம்பெற்ற கருத்துக் கணிப்புக்களுக்கு சமுகம் அளித்தவா்கள் மத்தியில் நடாத்தப்பட்ட ஆய்வின் மூலமே இத் தகவல்கள் தெரியவநதுள்ளது.

இலஞ்ச ஊழல் இடம்பெறுவதற்கான காரணங்களைக் கண்டறியவும் அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்ந்து அரசாங்க உத்தியோகத்தா்களின் கருத்துக்களை அறியவும் இவ் ஆய்வு நடாத்தப்பட்டதாக நிவாரண சேவைப் பணிப்பாளா் நாயகம் தெரிவித்தாா்.

(ற-4)

ஓம் தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

நீங்கள் எல்லையறற ஆன்மா என்பதை ஒரு முறை நிச்சயம் செய்து கொள்ளுங்கள். அது உண்மையானால் நீங்கள் உடம்பு என்பது பொய். நீங்கள் ஆன்மா, அதை உணர வேண்டும் ஆன்மா தன்னை ஆன்மாவாகப் பார்க்க வேண்டும். இப்போது ஆன்மா தன்னை உடம்பாகப் பாக்கிறது. அது நிற்க வேண்டும். இந்த அனுபூதி வரத் தொடங்கியவுடனேயே நீங்கள் முக்தா்களாகிவிடுவீர்கள்.

சுவாமி விவேகானந்தர்

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

பாலர் வகுப்பு ஆரம்பமாகியுள்ளது
(ஆங்கிலம் மட்டும் ஆங்கிலமூலம்)
மாதாந்தக் கட்டணம் 100/= பதிவுக்கு

தலைமை ஆசிரியர்
**விக்னேஸ்வரன் ஆச்சாரி**
426 (302) K.K.S வீதி, யாழ்ப்பாணம்,
(வண்ணை சிவன்கோவில் அருகில்)


## மலிவு விற்பனை பிற்போடப்பட்டது

கட்டைவேலி மெதடிஸ்த ஆலயத்தில் நாளை சனிக்கிழமை நடைபெற இருந்த மலிவு விற்பனை சுனாமி கடல்அனர்த்தம் காரணமாக பிற்போடப்பட்டுள்ளது. மலிவு விற்பனை இடம்பெறும திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

ஆலய நிர்வாகம்
கட்டைவேலி

(C-1013)

# மரண அறிவித்தல்

## கந்தையா செல்லையா (பதுளைச்செல்லையா)



கருங்காலியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் தட்டாதெரு இல.961ஐ வதிவிடமாகவும் கொண்ட கந்தையா செல்லையா (பதுளைச் செல்லையா, முன்னாள் செல்லையா ஸ்ரோஸ் சுன்னாகம் உரிமையாளர்) அவர்கள் 20.01. 2005 அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் முருகானந்தன் (உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஊர்காவற்துறை B.K), புவனேஸ்வரி, கதிர்காமநாதன் (ஸ்ரீநாதன் களஞ்சியம் இல. 961, K.K.S வீதி தட்டா தெரு யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத்தந்தையும், இந்திரா தேவி, நடராசா, (தீபிகா களஞ்சியம் நெல்லியான் வீதி சுழிபுரம்) சுதர்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும் கோகுலன், கோபிகா, தீபிகா, அகிஜா, மயூரிகன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.01.2005) வெள்ளிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு (புதியநேரம்) கீழ் குறிப்பிடப்படும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முகவரி:
தலையாளி வைரவர் கோவிலடி,
(பூனாறிமரத்தடி சந்தி)
சபாபதி லேன் கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

(C-1011)

### யாழ்....

சேதமடைந்த பாடசாலைகளுக்கு பதிலாக தற்காலிக பாடசாலைகளை அமைத்தல் மற்றும் கடலிலிருந்து 400 மீற்றருக்கு அப்பால் மீள்குடியமர்த்துதல், இதனால் ஏற்படும் நெருக்கடிகளை கையாளல் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டு முடிபுகள் எடுக்கப்பட்டன. (ச-35)

### பக்கச்...

களுக்கு 156 மில்லியன் அமெரிக்க டொலர்களை நோர்வே அரசாங்கம் உதவியாக வழங்கியுள்ளது. இந்த நிதியில் ஒருபகுதி ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஊடாக பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு வழங்கப்படுகின்றது.

இதில் பெரும்பகுதியை இலங்கைக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக நோர்வேப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (த-04)

### சுனாமித்...

களை சுனாமி அனர்த்தத்தைப் பயன்படுத்தி முன்னெடுத்துச் செல்ல முயற்சிக்கின்றாரா என சந்தேகம் எழுகின்றது என அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக எமது கவலையைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தநாட்டின் தலைவர்கள் 40 ஆயிரம் உயிர்க்ளைப் பலிகொண்ட அனர்த்தத்தின்மூலம் அரசியல் நோக்கங்களை நிறைவேற்ற முனைவார்கள் என்று நினைக்கக்கூட முடியவில்லை.

உரிய காலத்தில் ஜனநாயக நாட்டில் தேர்தலை நடாத்தவேண்டும். அதுவே பாராளுமன்ற ஜனநாயகத்தின் உரியபடி 2005ம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் இந்நாட்டில் தேர்தல் ஒன்றை நடாத்தவேண்டும். இது சட்டத்தின் தேவை. எனவே ஜனாதிபதியின் உரையின் உண்மையான அர்த்தத்தை மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டிய கடமை ஜனாதிபதிக்கு இருக்கின்றது என நம்புகிறோம் என பீரிஸ் மேலும் தெரிவித்தார். (ச-4)















# மரண அறிவித்தல்

## செல்லப்பா தெய்வானை



நெடுந்தீவு கிழக்கை பிறப்பிடமாகவும் பருத்தித்துறைவீதி முதலாம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற பெரியதம்பி நாகமுத்துவின் அன்பு மகளாகிய செல்லப்பா தெய்வானை 19.01.2005 புதன்கிழமை அன்று மரணமானார். அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் சேதுப்பிள்ளையின் மருமகளும், சுப்பிரமணியம் செல்லப்பாவின் துணைவியாரும், கதிர்காமம் மீனாட்சி ஆகியோரின் சகோதரியும், விமலேஸ்வரி (பிரான்ஸ்), யோகேந்திரன் (லண்டன்), அன்னலட்சுமி (இலங்கை), மனோகரன்(பிரான்ஸ்), வரதலெட்சுமி (இந்தியா) ஆகியோரின் தாயாரும்.

நரசிங்கமூர்த்தி (பிரான்ஸ்), இந்துராணி (லண்டன்), நித்தியானந்தன், (கிராம உத்தியோகத்தர்-இலங்கை), கிருஷ்ணமூர்த்தி (இந்தியா) ஆகியோரின் மாமியாரும், உமா, பாமினி, பாப்பா, சங்கர், அகிலா, ஜெயதேவா, மஞ்சியன், ஹரிமர்த்தனன் (சென்யோன்ஸ் கல்லூரி), ஹரிலோஜீனன் (யாழ்.இந்துக்கல்லூரி), நவீந்திரன் (B.A), சசீந்திரன்(B.E), கிருஸ்ணவரதா ஆகியோரின் பேர்த்தியாரும் விதுசன், சுருதி, மஞ்சரி, சத்தியன் ஆகியோரின் பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

9/3 1 ஆம் ஒழுங்கை
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(C-1012)


**ஒரே கூரையின் கீழ் உங்களுக்கான ஆங்கிலக்கல்வி, கணனி, தொழில்நுட்பம் மற்றும் புதிய இலத்திரனியல் உபகரணங்கள்**

**London Language School**
"school with golden touch"
யாழ் மண்ணில் ஆங்கிலக் கல்வியில் தனக்கென ஒரு தனி முத்திரையைப் பதித்துக்கொண்ட LLSன் ஆங்கிலக் கற்கைநெறிகள்
- # English for Communication
- # Foundation English for A/L (2006,2007, A/L examinations)
- # A/L General English Exam Coaching and Paper Classes (2005 April examination)

"Classes with Qualified Professionals Associated with Foreign Tutors"
FREE Seminar & Consultation 22nd 23 (sat & sun) 9 am - 4 pm
Contact London Language School
774 Hospital Road Jaffna 0777 222300, 0777 238605, 0776 176383

NIKAI JAPAN — நேரடியாக Japan நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான உற்பத்திகள் — BLACK&DECKER Power Tools and Home Appliances
VCDs, DVDs, Washing machines — 1Year Warranty
Television 14', 21', 21' flatrone — 5Year Warranty
**Black & Decker Products from England**
வலுச்சக்தி உபகரணங்கள் 6 MONTHS WARRANTY: DRILLERS, ROUTERS, ANGLE GRINDERS, PLANERS
வீட்டுப்பாவனைப் பொருட்கள் 1 Year WARRANTY: Rice Cooker, Gas Cooker, Blenders/ Mixers, Micro Wave Ovens
BLACK&DECKER NIKAI JAPAN DELTRONIC
SEASONAL SHOW AND SALES 22nd & 23rd @ London Language School
Contact PACIFIC NET
# 01, Brown Road, Jaffna Srilanka
Tel: 021 2226413
Hot Line: 0777 763781
E.mail: iso@sltnet.lk/easan@front.ru

**PACIFIC NET**
"THE TECHNOLOGY EDUCATION"
நவீன தொழில்நுட்ப உலகில் உங்கள் கணனி அறிவை வளர்த்துக்கொள்ள அரியதொரு சந்தர்ப்பம்
**எமது கற்கைநெறிகள்**
- Diploma in Software Engineering
- Diploma in Ms Office
- Diploma in Multimedia
- Diploma in Hardware Engineering
- Desk Top Publishing
- Computerized Accounting
- KIDS Computer Garden

Associated with Foreign QUalifed Proffessionals ➡ Unlimited Practical Hours
PACIFIC NET - TECHNOLOGY EDUCATION
NO - 01 Brown Road, Jaffna Contact 0777 763781, 0776 176383

**PACIFIC NET COMPUTERS**
யாழ்ப்பாணத்தில் அனைத்துவிதமான தரமான கணனி, கணனி உபகரணங்களை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளக்கூடியஒரே இடம்
- # Branded Unbranded Computers
- # PI, PII, PIII, PIV Computers (DELL, SAMSUNG, AOPEN, COMPAQ)
- # Computer Repairs & services
- # Educational & Entertainment CDs, DVDs
- # Maintenance, Networking and Software Installations

"FIRST COME FIRST SERVED"
SEASONAL SHOW & SALE @ London Language School
Contact PACIFIC NET COMPUTERS
#01 Brown Road, Jaffna, Sri lanka
T.P - 021- 222 -6413
Hot Line - 0777 - 763781
E-mail iso@sltnet.lk/easan@front.ru

22 ஆம், 23 ஆம் திகதி சனி, ஞாயிறு இரு தினங்களும் இலவசக் கருத்தரங்குகளும், பல்வேறு வகையான கணனி, இலத்திரனியல் உபகரணங்களின் விற்பனையும் நேரம்: காலை 10 மணிமுதல் மாலை 5 மணி வரை
LONDON LANGUAGE SCHOOL 774 Hospital Road Jaffna
(9235)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.01.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.